ஜோதிடம்

V 4 NO 34 27 Aug 1931.

JL
ஸ211, N28 KN
N31 4·34
188932

62

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

3 - OCT

Vol 4] 1931 ௵ ஆகஸ்டு ௴ 27௳ [No. 34.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 661
2. சிதம்பரதேவர் சரிதம்
Dr. V. S. அருணசலம்பிள்ளை 663
3. ஊழ்வினையும் ஆள்வினையும்.
K. நாராயண ரெட்டிகாரு 666
4. ஆண்டாள்—(கல்வியும் கவித்திறமையும்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 668
5. யாப்பிலக்கணம் (ஆசிரியப்பா) 669
6. கம்பராமாயணம் (தைலமாட்டு படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 671
7. சூளாமணி - (மந்திரசாலைச் சருக்கம்-101—108)
K. இராமரத்நம் ஐயர் B.A. 674
8. மலர்வனம்—விதியில்லா மதிபாலன்
"மதுகரம்" 675
9. வர்த்தமானம். 679

## கலாநிலயம்

188932

### வாசா கைங்கரியம் 1.

சான்றோரில் சான்றவரெனத்தகுந்த தாயுமானவர் பட்டினத்தடிகள் அனைய தூய்மையோர், கல்லாத கயவரென்றும் மெய்யிலாப்பொய்யரென்றும் புனைவேடக்கைதவங்கள் பயின்றுதிரிபவரென்றும், விலைமாதர் மயல்பட்டு உழலும் காமுகர்களென்றும் தம்மையே பற்பலவாறு இழிவுபடப் பழித்துக்கூறிக்கொள்வதை அவர்தம் பாடல்களில் மிகுதியும் காண்கின்றோம். இந்நூல்களின் கேள்வியறிவு சிறிதளவு இருப்போர்க்கும் இது தெரிந்திருக்குமாதலின் இங்கு அவைகளை எடுத்துக் காட்டவேண்டா. அவர்தாம் தம்மைப் பழித்துக் கூறிக்கொள்கின்ற சொற்களின் வன்மையையும் அளவையும் நோக்குமிடத்து, அன்னவரில் பாவியர் பிறரில்லைபோற் றோன்றும். தீமையே பூண்டொழுகும் சில சிற்றினத்தோர், "தாயுமானவர் பட்டினத்தடிகள் அனையவர்களே மெய்ந்நெறியைக் கடைப்பிடிக்கலாற்றாது மயங்கிக் காமத்திற் கடிமையாவாரெனின், எம்மனோர் எவ்வண்ணம் சலியாத நன்னெறியில் நிலைநிற்க வல்லேம்" எனத் தம்முடைய கயமைக்குத் தகுதியும் காட்டக் கேட்டிருக்கின்றோம்.

ஆழ்ந்த கல்வியும் அதனோடு தேர்ந்த அறிவும் இல்லாதார், பெரியோர் மொழிகளைப் புன்தொழிற்கு உடன்படுத்தும் படுபழிக் காரியங்களில் இதுவுமொன்று. பழிக்கஞ்சா இழிதகை மாக்கள் மிகக்கொடிய தீத்தொழில்கள் புரிந்தாலும் அதற்கென்றும் கழிவிரக்கம் கொள்வதின்றியே தக்கதே செய்தனர் தாம் என்னும் அமைதியே தேட முயல்வார். பெரியோர் தாம் மனோ வாக்கு காயங்களின் பாவங்களினின்று நீங்கியிருக்கும் காலையிலும் சீரியதல்லாத ஒரு சிறு எண்ணம் தம்மிடத்தே தோன்றியதோ இல்லையோ என்பதன் முன், பாதகம் ஏதோ பெரிது தாம் புரிந்துவிட்டது போற் மனம்பதைத்து வாய்குழறி மெய்ந்நடுங்கி உற்றபழி உரைத்தாற் போம் என்னும் பான்மையில் பல்படப் பகர்ந்து பரிபவராவார். குற்றமேயல்லாதவற்றையும் தம்முடைய குற்றங்கள்போல் தண்டனைகள் செய்துகொள்வார் இச்சீரியோர். வாரணசி சென்றிருந்த பார்ப்பனன் மனையை இரவுதோறும் காத்திருந்த பாண்டியமன்னன் அன்னான் மீண்டது அறியாது கதவினை யிடித்ததால், அம் மறையோனுக்குத் தன் மனைவியின்பால் அவ்வியம் விளைந்ததற்கு ஆற்றாது தன் கரத்தினைக் குறைத்தகொள்கை குற்றந் தான் இழைத்ததற்கோ. மன்னுயிர் ஓம்பும் மாபெரும் பாத்திரத்தினின்று தன்னுயிர் ஓம்புதல் பாதகம் பெரிதுடைத்தெனக் கருதினன் ஆபுத்திரன். தாம் கொள்ளையடித்துவந்த பொருளைக்கண்டு களிகொள்வார் ஒருதிறத்தோரென்னின், மறுதிறத்தோர் தாம் ஈட்டிய பொருளைப் பிறர்க்கீயும் செவ்வி வாய்க்கப் பெறாமையால் தாமே துய்க்கநேருமாயின் அப்போது அதனைத்தாம் கொள்ளைகொண்டுண்ணற்கே நிகராக அஞ்சி மாழ்குவர்; நாணின்றிச் சென்றிரப்பார் சிறியோர்; பெரியரோ, இரப்போர்க் கொன்று இல்லையென்று இயம்பநேருங்கால் நாணந்தலைகொண்டு செத்திடுவார். தன்னிற் குற்றமுடைய கையன் வேறில்லை என்று எண்ணினன் பொற்கைப் பாண்டியன். தெய்வக்கடினையினின்று உண்டானேல் தன்னிற் பெரிய

N31'4'34

வஞ்சகக்கள்வன் வேறெவனுவான் எனத் துணிந்தான் மணிபல்லவத்தில் மன்னுயிர்நீத்த அவ்வுத்தம ஆபுத்திரன். இறத்தலின் இன்னுது இல்லையாயினும் ஈதல் இயையாக்கடை அதுவும் இனிதெனவேண்டி, 'பாவியான் மாளாது இப்பாழுடலை எற்றுக்குச் சுமக்கின்றேன்" என்று புலம்புகின்ற மேன்மக்களை இக்காலத்திற் காண்பது அரிதேனும் கருத்தினுல் நினைத்துவக்க இயலும். தாயுமானவர் முதலியோர் தம்மை இகழ்ந்துகொள்வதெல்லாம் ஒரு வகையில் இத்தகைத்தே என்று கொள்ளல்வேண்டும்.

இதுவன்றி இன்னெரு வகையிலும் அவர்தம் தன்மையை நோக்கலாம். பிறர் இன்பதுன்பங்களைத் தம்முடைய இன்பதுன்பங்களாகக் கொள்வதுமல்லாமல் பிறருடைய பழியையும் தம்முடைய பழியாய்க் கொள்வர் மேலோர். மாண்புடைய சான்றோர்நிலை தனிநிலையன்று. அவருடைய உணர்வும் நினைவும் பிரபஞ்ச மடங்கலும் அளாவி இருக்குமாதலின் தம்மை மற்றவர்களோடு ஒற்றுமைப்படுத்தும் உணர்வினது ஊக்கத்தால் ஏனையோர் தீமைகளைத் தாம் மேற்கொண்டு தம்மின் வழியே அதற்கோர் கழுவாயுந் தேடுவது தங்கள் கடனுய் ஆற்றுவார். இயேசுகிறிஸ்துநாதர் இவ்வண்ணம் உலகத்தின் பாவங்களை எல்லாம் தான் சுமந்து அதற்காகத் தன்னைக் கழுமரத்தில் பலியாக்கிக்கொண்டார் என்று கூறும் கிறிஸ்திய கொள்கையின் தத்துவம் இதுவே. இயேசுகிறிஸ்து அதனை அறிந்து செய்தார். இவ்வகைத் தெளிவின்றியேயும் ஒற்றுமை உணர்வினுல் தாயுமானவர் அனைய உத்தமர்கள், பிறர் புரியும் தீச்செயல்களைத் தம்முடைய செயல்கள்போல் பாவித்து, "பொல்லாத சேயெனின் தாய் தள்ளல் நீதியோ......ஒன்றுமறியா வெறுந் துறும்பனேன் கைவிடுதல் நீதியோ" என்று இன்னபல வேண்டி இறைவனை இறைஞ்சுவர். இவ்வாறு இவர் இயம்புவதும் வேண்டுவதும் மாநுடவினத்தைத் தம்முள்ளடக்கிய பான்மையால் நிகழ்கின்றனவேயன்றி அவர்தம்முடைய தனித் தீமைகளைச்செப்பிக் கடவுள்பால் இரக்கம் வேண்டுகின்றுரென எண்ணலாகாது. "பிறர்மனைநோக்குவேமை யுறவெனப்பெறுதி போலாம்" என்றுடன்பிறந்தமரபினுல்இராவணனேடு அவன்பழியில் தன்னையும் உளப்படுத்தி உரைக்கவல்லவன் அரக்கர் இனத்துதித்த கும்பகர்ணன் ஆவானென்னின், அவனில் ஆயிரமடங்கு உயரிய பெரியோர் சிலர் உலகுள ஜீவகோடிகளனைத்தும் தம் முடன்பிறவி என்ற நிச்சய உணர்வினுல், "நாயினேன், பேயினேன், வஞ்சகக்கள்வனேன்............" என்று இன்னபலவாற்ருல் தம்முடைய இழிவைக் கூறிக்கொள்ளுங்கால் அவ்விழிதகவுடைய மற்றவர்களையே தன்மையில் வைத்துப் பேசுகின்ருர்களென்னும் நுண்ணிய உண்மையை நுனித்துணர்தல் எளியதாகும்.

இத்துணை யாம்இங்குக் கூறியது அத்தத்துவத்தை விளக்குவது மாத்திரமன்றி வேருேர் நினைவையும் உட்கொண்டிருக்கின்றது. தாயுமானவர், "வாசாகைங்கரியமன்றியொருசாதனம்...வாலாயமாய்ப்பழகியறியேன்" என்ருெருபாட்டில் தன்னை வைதுகொள்வதை யாவரும் அறிந்திருப்பார்' இதுவும் உலகத்தின் பொதுமக்கள் புன்மையைத் தனதாக்கிக்கொண்டு புகன்றவைகளில் ஒன்று. நன்மார்க்கத்தில் இச்சைபோல நேசானுசாரியாய் விவகரித்து வீண்மொழிகள் சில விளம்புவதுடன் தம் கடமையெல்லாம் முடிந்துவிட்டதாய்க் கருதிப் பண்டையபடி தம் பயனும் நயனுமில்லா வழிகளிலேயே உழல்வது மாநுடப்பெரும் பகுதியின் ஒழுக்கமாவது எத்துணை இழிவிற்கும் இன்னல்களுக்கும் இடமாகின்றதென்பதைக் கணித்து நோக்குங்கால் செம்மையிற் சித்தம்வைத்த பெரியவர் சாலக்கலங்குவார். வள்ளுவர் பெருமையைப் பள்ளிக்கூடம் முதல் பல்கலைக்கழகங்கள் ஈருகப் பலபட வழங்குவதெல்லாம் வாசாகைங்கரியமாகின்ற கொடுமையை முன்னேரிடத்தில் எடுத்தியம்பி யிருக்கின்ருேம். வள்ளுவர் பிறந்த நாடன்ருே இது என்று இறுமாந்துரைப்பர் தேசாபிமானிகள். "நந்தம் வள்ளுவரை வேறு எப்பாஷை உடையது" என்று நெட்டுரை நவில்வார் தமிழபிமானிகள். திருக்குறளின் மேன்மையருமைகளைப் பற்றி நிகழ்த்தும் சொற்பொழிவுகள் எத்தனையோ. திருவள்ளுவர் திருநாளைக் கொண்டாடும் கழகங்களுக்குக் குறைவில்லை. எனினும், அத் தேசபக்தர்களும் தமிழ்த்தொண்டர்களும், சொற்பொழிவாளர்களும், கழகத்தினர்களும், இவர்தம்மோடு நடிக்கும் ஏனையோர்களும், தத்தம் தனிவாழ்க்கைகளிற் புரியும் அவலச்செய்கைகள் ஒருபுற மிருக்க, பொதுஜன நன்மைக்கென்று முயல்கின்ற இயக்கங்களனைத்தும் மொழிகின்ற வழிகளனைத்தும் அவ் வள்ளுவர் வகுத்துரைத்த உண்மைநெறி ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் வகையில் நேரே எதிர்ப்பட்டிகலிநிற்பதைச்சற்றே உற்று நோக்கினுல் உணர்வது அருமையன்று. "இலமென்றசைஇ யிருப்பாரைக் காணின் நிலமென்னும் நல்லாள்நகும்" என்ற குறளிற்கு இக்கால தனுதாய முறைகள் ஒன்றுனு மிணங்கவில்லை. எத்துறையிலும் வாதிக்கப்படும் சீர்திருத்தங்கள் ஒன்றுகிலும் திருக்குறளின் அருநெறிக்கு ஒக்க நடப்பதன்று. "பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்" என்ற குறளெங்கே, இக்காலத்தவர் நாகரிகத்தைக் கொண்டாடி உரைக்கும் மொழிகளெங்கே. இப்படியே வள்ளுவர்க் குற்ற கதி உண்மைநெறியை உரைக்கின்ற மேன்மக்கள் எல்லாரையுஞ் சென்றடைகின்றது. எல்லாம், வாசாகைங்கரியமாவதன்றி அவரை வழிபட்டு ஒழுக ஒருவரேனும் முயல்வாரலர். முற்காலத்தவரல்லாமல் தற்காலத்தவர் நுவலும் நுண்ணிய நல்லுரைகளும் இவ்வண்ணமே வாசாகைங்கரியமாய்த் தள்ளப்படுகின்றது. அன்னுர் புகழைத் தமது பெருமையின்பொருட்டு வளர்க்கும்வண்ணம் அவ்வப்போது சில வாய்ப்பலிகள் வழங்கிக்கொண்டிருந்தால் போதுமென்பதே மக்களின் கொள்கையாயிற்று. அவர் இயம்பும் மொழிபற்றி ஒழுகவேண்டுமென்ற நினைவுந் தோன்றுதது கலியுகக் கயமைகளில் மிகக் கொடியது. சென்னைச் சட்டசபை அங்கத்தினர்களில் ஒருவர் தமிழின் அருமையையும் மாதர்களின் உரிமையையும் பற்றி நிகழ்த்திய ஓர் சொற்பொழிவினிடையே, 'ஔவையும், சிலப்பதிகாரம் எழுதிய மணிமேகலையும் போன்ற மாதரசிகள் இருந்த நாடன்ருே இது" எனவிளம்பினுர்—இது நகைத்தற் கொத்த தன்று. பேச்சிற்கு யாதேனும் இரண்டு பேர்களும் சில சொற்றொடர்களும் கற்றவர்களே பெரும்பாலும் நம்மை வாழவைக்க வருகின்ற பாவத்தை நினைத்து அழுகின்ற கண்ணீர் ஆருகப் பெருகவன்ருே வேண்டும். வாசாகைங்கரியமே செய்வதற்கு எந்தப் புல்லுஞ் சொல்லை [illegible]ால் வல்லமை [illegible]த்தன்ருே.



# சிதம்பரதேவர் சரிதம்.

[650-வது பக்கத் தொடர்ச்சி]

## 3. அரண்மனைப் பள்ளியறை.

இந்திரசேனை:—பிராணநாதா, புத்திரபாக்யமில்லாத இந்நிலையை ஓர் குறையாக நமக்குக் கடவுள்வைக்கவில்லை. நமது புத்திரிகளில் காந்திமதி, எல்லாக்கலைகளையுங் கற்று அஸ்திரசஸ்திரப் பிரயோகங்களிலும் பயிற்சியடைந்து சத்துருவைச் செயிக்கத்தக்க ஆற்றலுடையாளன்ருே? சந்திரலேகை காந்திமதியைப் போலவே சகலகலா வல்லமையிலும் மந்திரதந்திர யுக்தி சக்தியிலும் ஆயுதாப்பியாசத்திலும் தேர்ச்சியடைந்துதனக்கு நிகரில்லையென்று நிமிர்ந்திருக்கிருள். இந்தப்பாக்கியம் தங்களுக்கேயன்றி எந்த அரசருக்கிருக்கின்றது? அப்படியிருக்கத் தேவரீர் விபாகுலமடைந்து இராஜ்யவிசாரணையுமின்றிப் பள்ளியறை விட்டகலாது சோகித்திருக்கிறீர்களே! இதென்ன புதுமை! நாங்களெப்படிச் சகிப்போம். கவலையை ஒழித்து நித்தியகடனை முடித்துச் சபைக்குச்சென்றுதாங்கள்வாஞ்சையுடன் பாதுகாத்துவரும் பிரஜைகளைக் களிக்கச்செய்யவேண்டும். சபையோர்கள் நமது கார்யாதிகளை எப்படி நடத்திவருகிருர்களோ, சற்று யோசியுங்கள்."

சுமதிமாது:—"ஒ, என் இன்னுயிர்தலைவா! என் தமக்கையும் யானும் பலநாள் தேவரீருக்குத் தேறுதல் சொல்லியும் கொஞ்சமேனு மிரங்காமல் இப்படித் தேகத்துக்கு நலிவுகொடுப்பது தகுமா? பெண் அரசு செய்ததாகக் கேட்ட தில்லையா? மலைமகள் அரசு புரிந்து திக்விஜயமும் செய்ய வில்லையா? மதுரையிற் பாண்டிய அரசன் புதல்வி சித்திராங்கி அரசுசெலுத்தவில்லையா? இன்னும் அநேகப் பெண்ணரசிகளிருந்ததாக அறிந்திருக்கிருேமே. அதுபோல நமது புதல்விகளும் அரசியற்றுவதற்கு யாது தடையிருக்கின்றது? அவர்களுக்குக் கல்விப்பயிற்சி போதாதா? அவர்கள் தினந்தோறும் ஆண்வேடம் பூண்டு ஒருவரோடொருவர் தங்கள் பயிற்சிகளை வளர்த்துக்கொண்டு வருவதுமன்றி யுத்தகாலங்கள் நேரிடும்போது யுத்தமுகத்தில் ஆண்மக்களுக்கு நிகராகத் தம் ஆற்றலின் சிறப்பை எவ்வாறு காண்பிப்பது என்று ஒவ்வொருதினமும் ஒவ்வோர் முறையைப் பழக்கப்படுத்தி வருகிருர்களே. இவர்கள் இப்படி இருக்கத் தேவரீர், இராஜாங்கத்தை ஏற்று ஆள ஆண்மகவின்மைக்கு வருந்துதல் தகுமோ? ஒருத்தி இராஜாங்க மேற்றுக்கொள்வதற்கும் மற்றொருத்தி மந்திரியா யிருப்பதற்கும் பயிற்சி யுடையவர்களே. தேவரீர் எழுந்திருந்து சோகத்தை நீக்கி நடக்கவேண்டிய கார்யாதிகளைக் கவனிக்க வேண்டுகிறேன். இப்படித் துயரமே படுவதால் ஆண்மகவை யடைந்து ஆநந்தமடைய முடியுமா? முயற்சியின்றி எதைத்தான் நிறைவேற்ற முடியும்?" என்று வினயமாய்ப்பேசி அடிவருடிப் புன்சிரிப்புத்தவழும் முகத்தோடும் அயல்நின்ருள்.

அரசன் பஞ்சணையி லெழுந்து உட்கார்ந்து தன் மனைவியரை நோக்கி; "ஓ என்னிரு கண்ணின்மணிகளே! உங்களைப் பட்டமகிஷிகளாகப் பெற்ற எனக்கு யாது குறை? உங்களுடைய யுக்தி சாமர்த்தியத்தாலல்லவோ நான் சக்ரவர்த்தியா யரசு புரிகின்றேன்? நும் கர்ப்பத்துதித்த குழவிகள் அற்பமாய்ப் போமா? நீங்க ளிதுவரை ஓதிபன யாவும் நேரிதே; ஐயமில்லை. சோகித் திருப்பதால் என்ன பயன்? நமது குமாரத்திகள் சத்துருக்களை வெல்லவும் இப்போரசினைத் தாங்கவும் சக்தியுள்ளவர்கள்தான், ஆயினும்....... (தடாக் தடாக் தடாக்,)

இந்திரசேனை:—"யாரடி பங்கே கதவைத் தட்டுகின்றது?"

புஷ்பகவல்லி:—அம்மணி, அடியேன்புஷ்பகவல்லி, அனந்தம் வந்தனம்; மன்னிக்க வேண்டுகின்றேன்.

இந்திரசேனை:—புஷ்பகவல்லி, என்ன ஆபத்து! நீ சமயந் தெரிந்து நடப்பவளாயிற்றே. இந்தச் சமயத்தில் தகுந்த காரணமின்றி வரமாட்டாயே; யாது விசேடம்?

புஷ்பகவல்லி:— அம்மணி, முதன்மந்திரி விக்ரமசேனர் மிகவும் பரிவுடன்வந்து இராஜசேவை அவசியங் கிடைக்கவேண்டும் என்று பிரார்த்திக்கின்றனர்; அவர் பரிவினைக்கண்டு ஆற்றமுடியாமல் இங்கு நிருந்த பயத்துடன் வரலாயினேன். கட்டளையிட்டா லழைத்து வருகின்றேன்.

அரசன்:—விக்ரமசேனனை வரச்சொல்.

இந்திரசேனை:—அப்படியே, முதன் மந்திரியை யழைத்துவர மகாராஜாவின் உத்திரவாகி இருக்கிறது, போகலாம்.

விக்ரமசேனன்:—மஹா ராஜாவே! ஏகச்சக்ராதிபதியே! என்தந்தைக்குநேரான கருணையுள்ள அரசே, தெய்வமே, நமஸ்காரம்; அம்மையே, நமஸ்காரம்.

அரசன்:—விக்ரமசேனரே எழுந்திருக்க வேண்டுகிறேன்."

அரசியர்:—மந்திரி, எழுந்திருக்கவேண்டும்; வந்தனம், வந்தனம்.

விக்ரமசேனன்:—"அடியேனுக்குக் காட்சிகொடுத்தருளியது என்பாக்கியம்; நா னிந்தச்சமயத்தில் இங்குவந்து இடர்செய்வதைப் பொருத்தருளவேண்டும்.

அரசன்:—இவ்வளவு வியாகுலத்துடன் பள்ளியறை தேடிவந்து முகம்சோர்ந்து நிற்பதற்கு என்ன காரணம்?

விக்ரமசேனன்:—தேவரீர் பள்ளியறைவிட்டு நீங்காமற் சோகமாய்க்கிடப்பது தெரிந்து இவ்விடம் வந்தேனும் தரிசினஞ் செய்யலாமெனத் துணிந்தேனேயன்றி வேறொரு காரணமுமில்லை. எனினும், தேவரீர் எமதன்னையுட னிருக்கும் பள்ளியறைக்கு நான் வந்த பிழை பொறுத்தருள்க.

அரசன்:—விக்ரமசேனரே, என்னரண்மனையில் நீர் வரக்கூடாத விடமு முளதோ? என்னை இங்குத் தேடியடைந்ததன் காரணத்தை விரைவிற் கூறி என் ஆற்றுமையைத் தீர்ப்பீராக.

விக்ரமசேனன்:—ஓ மஹானுபாவா, இவ்வளவு பாக்கியங்களுடனும் ஏகசக்ராதிபதியாய் இருந்து அரசாட்சி செய்யினும் இறுதியில் ஓர் நற்கதி கொடுக்க வல்லபுத்திரனில்லாவிடின்யாதுபயன்? "புத்" என்னும் நரகத்தினின்று தன்தந்தையைக்காப்பதனுலேயன்ருே "புத்திரன்" என்று அவனை மறைகள் கூறுகின்றன.

ஆதலால் ஓர் புத்திரன் வேண்டுமென்ற சோகத்தால் தேவரீர் வருந்து மிதனையறிந்த சபையோர் யாவரும் வாயிலிற் காத்துக்கொண்டிருக்கின்றனர். அடியேன் கருத் தென்னவெனில்—சோகித்திருப்பதிற்பயனில்லை. நாம் வழிபடு கடவுளாகிய விச்வநாதீச்வரரைச் சிந்தித்துத் தவம்புரிந்து அவர் கிருபாகடாக்ஷத்தாற் புத்திரபாக்கியம் பெறலாமென்பது என் நம்பிக்கை. ஆகையால் தேவரீர் சோகத்தை யகற்றித் தவத்திற்கு முயலவேண்டு மென்பதே.

அரசன்:—"ஓ மந்திரி, உம்மைப்போன்றவோர்நண்பனைப் பெற்ற எனக்குக் குறையுமுண்டோ! உள்ளது உள்ளபடி என்னுடைய எண்ணத்தை யறிந்துரைத்து விட்டீர். உமது யுக்தியே யுக்தி. ஆகா கங்காதரா, என் விக்ரமசேனர் சிரஞ்சீவியாயிருக்க வரமளிப்பாயாக! விக்ரமசேனரே, நீர் வருவதற்குச் சிறிது நேரத்திற்கு முன் என் நாயகிகள் என்னை தேற்றியிருந்தனர். என் கண்மணிகளான புத்திரிகளுடைய வீரத்தையுமெடுத்துக் கூறினர். நீர் சொல்லிய நுட்பத்தை எடுத்துக்காட்ட நினைத்தேன். அதை யான் சொல்லுவதற்குப் பதிலாக நீரே விளங்க உரைத்துவிட்டீர். ஆகையால் யான் இனி உமதிஷ்டப்படி சங்கரசேவை செய்வதற்கு என் பத்னிகளுடன் முயலுவேன். நீர் சபையோரை அழைத்துக்கொண்டு சபைக்குப் போவீராக. நானும் இதோ நித்தியகடனை முடித்துக்கொண்டு அங்கு வருகின்றேன்."

பள்ளியறைக்கு வெளியில் அரவம் இன்றி ஒளிந்து நின்று இங்குநிகழ்ந்தவைகள் அனைத்தையுங்கேட்டுக் கொண்டிருந்த பராக்ரமசேகரன், தன தெண்ணம் நிறைவேறாதது கண்டு, "கேடுவரும் பின்னே மதி கெட்டுவரும் முன்னே," என்னும் பழமொழிக்கிணங்கத் தேகம் படபட வென்று நடுங்க மயிர்சிலிர்ப்ப அந்த அறையினுட் புகுந்தான். இவனைக் கண்டவுடன் இராஜபத்னிகள் அச்சமுற்றுத் திரைக்குள் மறைந்தனர். நுழைந்தவன், பரபரப்பாய் இராஜனைப் பார்த்துச், "தமையனாகிய என் சக்ரவர்த்தியே, ஏனிந்தவியாகுலம்? பிதுர்கர்மஞ்செய்ய என் குமாரர்கள் மூவரிருக்கின்றார்களே. தங்களுக்கு யாரிடம் விருப்பமதிகம் உளதோ அவனை ஸ்வீகாரம் செய்துகொள்ளலாகாதா? பிள்ளைகளில்லாத அரசர் இவ்வுலகில் அவ்விதம் செய்வதில்லையா? செல்காலமெல்லாம் சென்றபின் ஏன் பிள்ளைவரத்திற்குத் தவம்முயலப் போக வேண்டும்? அப்படித் தவம் பண்ணினுற் புத்திரபாக்கியம் உண்டாகுமா? வீணாகத் தவவேடம் பூண்டு வருந்தவேண்டாம். ஒரு புத்திரன் போதாவிடில் மூவரையும் சுவீகாரஞ் செய்துகொள்ளலாமே. இதையேன் விக்ரமசேனை நீ சொல்லாமல் இருந்துவிட்டாய்?" என்றான்.

அரசன் சினத்துடன் பராக்ரமசேகரனைப் பார்த்து, "நீ யனுமதியின்றி உள்ளே நுழைந்ததுவே பிழை. என் பத்தினிகள் அருகில் இருக்கின்றார் என்பதைச் சற்றேனும் நினைக்கவில்லை நீ. தவிர, மற்றவர் பேசிக் கொள்வதை மறைந்துநின்று கேட்பது உத்தமர்க்கு அழகன்று. உன் மனோவிகாரத்தை உன்னுடம்பும் முகமும் வெளியிடுகின்றன. கடவுள் யாவரையுங் காப்பவர். ஆகட்டும்; சங்கரசேவையாலெமக்குப் புத்திரனுதிக்காமற் போகின் நின் புத்திரர்களிலொருவனை சுவீகாரம் செய்துகொள்ள யோசிப்போம். இப்போது இவ்விடம் விட்டகன்று சபைக்குப் போவாயாக," என்று மனவெறுப்புடன் கூறினான்.

இவ்வாறு கடிந்துரைத்ததைக் கேட்ட சேனாதிபதி முதன்மந்திரியைத் தொடர்ந்து சபையை நோக்கிச் சென்றான் அரசன் பத்தினிகளுடன் எழுந்து பள்ளியறையைவிட்டு நந்தவனஞ்சென்று சந்தனமரச்சோலையினிழலில் இரத்தினபீடத்தில் வீற்றிருந்து யோசிக்கலானான். "பராக்ரமசேகரன் எண்ணம் எவ்விதமிருக்கலாம்? சிறிதும் அச்சமின்றித் தன்னைத்தனக்கே தெரியாமல் படபடப்புடன் பள்ளியறை நுழைந்ததும், நாம் சொன்ன பதிலினால் முகங்கருத்து வியப்புற்றுப்போனதையும் ஆழ்ந்து கருதுமளவில் அவன் தன் மனதில் நமக்கு க்ஷேமத்தைக் கோரியவனாய்த் தோற்றவில்லை. தனது லாபத்தை இச்சித்து அதை நிறைவேற்றுவதற்கே அவசரப்படுபவன்போ லிருக்கிறான்!" என்று தனக்குள் தானே சொல்வதைக் கவனித்துக் கொண்டிருந்த அரசிகள் அவனை வணங்கி, "ஐயனே! அவர் தன் குமாரர்களி லொருவருக்கேனும் தங்களுக்குப் பிறகு இராச்சியத்தை யெப்படியும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வெகு காலமாக முயற்சி செய்துவருகின்றார். இன்றைக்குத்தான் உள்ளும் புறமுமாக வெளியிட்டார். ஜகதீச்வரனாகிய சாம்பசிவமூர்த்தியைக் குறித்துத் தவம்பண்ணினால் ஒருவேளை நமக்கு ஆண்மகவு பிறந்துவிடுமோ என்று வெருண்டு தன் னெண்ணத்தை யிவ்வளவு அவசரமாய் வெளியிட வந்தார். எப்படியும் அவர் நமது க்ஷேமத்தைக் கருதியவராகத் தோற்றவில்லை. இது உண்மை. தேவரீர் அவர் விஷயத்திற் சாக்கிரதையாக விருக்கவேண்டும் என்பது எங்கள் பிரார்த்தனை," என்றனர்.

அரசன் தனக்குள், அவனைச்சேனாதிபதியாய் வைத்திருப்பது பெருந் தவறு என்று தீர்மானித்துப் பத்தினிகளை நோக்கி, "ஏதோ நம்மாலானமட்டும் பார்ப்போம்; கடவுள் கிருபை எப்படி இருக்கிறதோ; ஆயினும் சாம்பசிவமூர்த்தியைப் பஜித்துத் தவம் பண்ணுவதற்கு நீங்களிருவரும் ஏகாக்ர சிந்தையர்களாயிருந்து இன்றுமுதல் என்னுடன் விரதம் அனுஷ்டிக்க வேண்டும். விச்வநாதரைப் பிரதக்ஷிணஞ் செய்து அனுதினமுந் தரிசித்து நமது குறைகளைச் சொல்லி முறையிட்டுக்கொள்வோம்; அப் பராபரக் கடவுள் கிருபை செய்வார். அப்படியின்றி நாட்டைவிட்டுக் காட்டிற் சென்று தவம்புரிவதற்கு இப்போது நமக்கு நேரான காலமன்று," என்று கூறினான். பத்தினிகளும் அதற்கிணங்கவே யாவரும் அரண்மனைசேர்ந்து சோமவாரம் அனுஷ்டிக்கலானார்கள்.

---

## 4. விஜயசேகரன்.

இராஜவீதியின் அரசனரண்மனைக் கருகில் பன்னிரண்டாவது மூன்றுநிலை மாளிகையான ஓர் கட்டடத்தின் மூன்றும் மாளிகையில் இரகசியமான ஓர் சிறு அறையில் உட்கார்ந்துகொண்டு வியாகுலத்துடன் தனது முதல்புதல்வன் சோமபாலசேகரனைப் பார்த்து, "ஓ குமாரா, நமதிஷ்டம் இன்னும் நிறைவேறவில்லையே. உங்களிலொருவனையாவது தத்தமெடுத்து இராஜ்யத்தை நமது சந்ததிக்குக் கொடுத்துவிடுவான் குலசேகரனென் றுநினைத்திருந்தேனே; அன்று இராஜ சபையில் அவ் விக்ரமசேனன் என்னை அவமதித்துப்



பேசினதுமல்லாமல் இராஜனுக்குப்புத்திராபேட்சையுமுண்டுபண்ணிச் சங்கரசேவை செய்து புத்திரனைப் பெற முயலும்படியும் செய்துவிட்டான். நானென்ன உபதேசம் செய்தும் குலசேகரன் என்னைக் கடிந்து அவமானம் பண்ணி யனுப்பிவிட்டான். இவை யெல்லாம் உங்களுக்குத் தெரிந்திருக்கிறது. இனிக் கடவுள் கிருபைகூர்ந்து இவ்வரசனுக்குப் புத்திரனையுங் கொடுத்துவிட்டால் நாம் செய்வது யாது? இதர உத்யோகத்தைச் செய்துகொண்டிருந்து காலஞ்செலுத்துவதோ நமது கதி? நீங்கள் மூவரும் யோசனை செய்து தகுந்த யுக்தி சொல்லவேண்டும்," என்றான் பராக்ரமசேனன்.

பிதாவின் முகவிகாரத்தையும், அவனது மனோவிகாரத்தையும் முற்றும் பார்த்துக்கொண்டிருந்த விஜயசேகர னென்னும் கடைசிபுத்திரன், மிகவும் விசனமுற்றுத் தன் தந்தையை நோக்கிப் பணிந்தெழுந்து மிகுந்த வினயத்துடன், "ஓ பிதாவே, நீங்கள் எங்கள் விஷயத்தைக் குறித்துச் சிரம மெடுத்துக் கொண்டு வருந்துவதினால் தேவரீர் தேக மிளைத்துப் போவது மன்றிப் புத்தியானது சத்துவ குணத்தை நாடாது எப்போதும் இராஜஸத்திலேயே நிற்கிறது. அதனாற் கதியடைவது ஒருநாளு மில்லை; வீணாய்க் கிடைத்தற்கரிய இம்மானிட ஜன்மம் பாழாய்ப்போய் விடுகிறதே, என் செய்வேன்; "நடவாதது என்முயற்சி செய்யினும் நடவாது, நடப்பதென்தடை செய்யினும் நில்லாது," இது சர்வ சம்மதம். பராபரக் கடவுள் தனது ஜ்வலிக்கின்ற அக்னி நேத்திரத்தின் உஷ்ணந் தணிந்து சாந்தமாயிருக்க வன்றோ கங்கையையுஞ் சந்திரனையுஞ் சடையி லணிந்தார்!

"சாந்தத்தைத் தேடாது, சஞ்சலத்திற் குட்பட்டு அதன்வழியே செல்லுவதால் மனோதுக்கமும் புத்திர மித்திரகளத்திர நஷ்டமும் பொருள்விரயமும் பந்தநாசமும் தடையில்லாமல் நேரிடுவதன்றிக் கடைசியாய்க் கதியும் கிடைக்காமற்போம். ஆகையால் கடவுள் விட்டபடி முடியட்டும்; நம்மா லாகவேண்டிய தொன்றுமில்லையென்று பகவானைச் சேவைசெய்துகொண்டிருப்போம். இந்தக் குலசேகரப் பெருமாளைப்போலெத்தனைபேர் இராஜ்யபரிபாலனம் பண்ணினார்கள்? அவர்களெல்லாம் இப்போது எங்கே போயினர். "அவனிச்சையின்றி அணுவுமசையாது," என்ற பழமொழி கேட்டதில்லையோ? எங்களுக்கு இராஜாங்க மேற்கப் பிராப்தமிருந்தால் அந்தப் பாக்யம் தானாகவே வரும்; அதற்காகநாம் சன்மார்க்கத்தை விட்டுத் துன்மார்க்கத்தில் பிரவேசிக்க வேண்டியதில்லை.

"குலசேகரப் பெருமாளுக்குக் கடவுளருளால், ஒரு ஆண்மகவு உற்பத்தியாகுமேல் நாம் மிகவும் களிக்க வேண்டியவர்களே. அதைவிட நமது வம்சவிருத்திக்கு வேறென்ன வேண்டும்? கடவுள் நமக்களித்திருப்பதே போதுமானது. தந்தையே, இவைகளை யெல்லாம் மறந்து சாதுசங்கஞ் செய்து பரப்பிரம்மத்தை யடையும்படி தகுதியான முயற்சிகள் தேடவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்; யான் சிறுவனென்று என்வார்த்தையை அங்கீகாரம் பண்ணாமல் தள்ளாதீர் என் ஐயனே!" என்று கண்கலங்கி முறையிட்டுக் கொண்டான்.

இச்சொற்களைக் கேட்டவளவில் கோமளாங்கசேகரன் கடுஞ்சினங்கொண்டு விஜயசேகரனைப் பார்த்து, 'அப்பா தகப்பன் சாமி! நீ யிருக்கு மிருப்பு என்ன? உன்பேச்சின் வலிவென்ன? இச்சிறு பாலப்பிராயத்திலேயே இச்சையெல்லாம் விட்ட பரமயோகியைப் போல் எங்கள்முன் பிரசங்கிக்கிறாய்; நமது தந்தைக்குப் புத்தி கூறுகிறாய்; மிகவும் அழகாயிருக்கின்றது. பிஞ்சிலேயே பழுக்கலாகாது. அப்பா, உன்புத்தியைக் கேட்டு அதற்கனுசரணையாய் நடக்கத்தகுந்த துறவு எங்களுக்கு வரவில்லை. ஆகையால் நீ தயவுசெய்து அந்தப்புரம்போ," என்று புன்னகையுடன் தம்பியின் கையைப்பிடித்து எழுந்திருக்கச்செய்து போகும்படி சைகை காட்டினான்.

விஜயன், தந்தையையும் முதற்றமையன் சோமபாலசேகரனையும் பார்க்க, அவர்கள் கோமளாங்கன் செய்கைக்கு அனுகூலமாக விருப்பதைக்கண்டு, "சிறுவன் சொல் இப்போது செவிக்கு ஏறாது," என்றுரைத்துக் கொண்டு அறையைவிட்டு வெளியிற் சென்று தனதிஷ்டதேவரான முருகக்கடவுளைத் தியானித்து மனதைச் செம்மை செய்துகொள்ளத் தன் னிருப்பிடஞ் சென்றான்.

சோமபாலன்:— (தந்தையை நோக்கி) "பிதாவே, தாங்கள் இராச்சியம் நம்மைவிட்டுப் போகுமென்று எள்ளளவேனும் சந்தேகிக்க வேண்டாம். இப்போது முடியாவிட்டால் இன்னுங் கொஞ்சநாளிலோ, வருஷங்களிலோ இந்தச் சக்ரவர்த்திப்பட்டம், நமது குடும்பத்திற்கு வரப்போகிறது. குலசேகரப் பெருமாள் இரண்டு பெண்களைப் பெற்றிருக்கின்றார். அவர்களெவ்வளவு சாமார்த்திய முடையவர்களாயினும் பெண்களேயல்லவா? அவர்களை வெல்லுவது ஒருநிமிஷம். அவர்களுக்கு விவாகம்பண்ணி யனுப்பிவிடுவதானாற் பிறகு நாம் தானே இராஜ்யம் ஆளவேண்டும். நம்மை விட்டுக் குலசேகரன் தன் மருமக்களுக்கு இராஜ்யத்தைக் கொடுப்பானா? அப்படிக் கொடுப்பதானலப்போது நமது புஜபலபராக்ரமத்தைச் சற்றே அவர்களுக்குக் காண்பிக்கலாம்; பிரஜைகளும் மந்திரிகளும் சைனியங்களும், நம்முடன் சேர்ந்துவிடுவார்கள்; அதற்குத் தடையில்லை. நம்மைவிட்டு இதர வம்ச அரசர்களான குலசேகரன் மருமக்களோடு சேரமாட்டார்கள். குலசேகரனுக்குச் சிவபெருமான் அருளால், ஆண்குழந்தையுண்டானால் அக்குழந்தை பட்டாபிஷேகஞ் செய்துகொள்ளும் வரையில், இக்குலசேகரனும் விக்ரமசேகரனும் உயிரோடிருக்கப் போகிறார்களா? அப்படி இருந்தாலும் நாமென்ன சும்மாவிருக்கப்போகின்றோமா? சேனைகளெல்லாம் நமது வசமாய் இருக்கிறது; இதுமுதற் சைனியங்களிடம் மிகப் பிரீதியாய் இருந்து, நம்மிடம் நம்பிக்கை யுண்டாகச்செய்துகொள்ளவேண்டும். இராஜாங்கத்திலிருக்கும் மந்திரிகளிற் சிலரை நமது வசப்படுத்திக்கொள்ள வேண்டும். இவையாவும் குழந்தை உற்பத்தி யாவதையும் பெண்களுக்கு விவாக மாவதையும் பார்த்துக் கொண்டு முயற்சி பண்ணுவோம். பிதாவே, யாதொன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லை," என்றான்.

இதைக்கேட்டு மகிழ்வுற்றிருந்த கோமளாங்கன் தந்தையை நோக்கி, "ஐயனே! தமையன் சொல்வது சரி. நம்மைவிட்டு இந்த இராச்சியம், எங்கே போய் விடும்? ஒருவேளை போய்விடுமோ என்ற சந்தேகத்திற் கிடமாக யாதேனும் நேருமாயின் இரண்டு பெண்களையும் இரண்டு சேவகர்கள் கையில் கொடுத்து இரவில் ஊர் எல்லையிலிருக்கும் பத்திரகா

ளிக்குப் பலியிடச் செய்வோம். ஆண்குழந்தை பிறந்தால், அவன் பட்டத்துக்கு வருமுன் அவனைக் கொலை செய்துவிடுவோம். குலசேகரப்பெருமாளையும் அந்த விக்ரமசேன னென்கின்ற அகங்காரியையும் சிறையிலடைத்து யானே ஏக சக்ராதிபதியாய் இராஜ்யம் ஆளுவேன். பிதாவே ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். எனினும், அவசரப்பட்டுக் காரியங்களை முன்போற் சமயமறியாமல் வெளியிட்டுக் கெடுத்துவிடக்கூடாது. இன்னுஞ் சிறிதுகாலம் பொறுக்கவேண்டி இருக்கிறது. பொறுத்தோர் பூமியாள்வார். சேனாதிபதி உத்யோகத்தைப் பிதாவிருக்கும்போதே தமையனைவிட்டுப் போகாதிருக்கச் செய்வதொன்றே வேண்டுகின்றேன்," என்று உறுதியாகவும் தந்தையின் முகம் மலரும்படியும் கூறினான்.

பராக்ரம சேகரன் முதற்பிள்ளையின் யுக்தியையும் இரண்டாம் பிள்ளையின் உறுதியையுங் கண்டு களித்து, "எனது குமாரர்கள் ஜாக்கிரதையாகவே இருக்கிறார். மிக விவேகிகள்தான். நான் அதிகம் பிரயாசைப்பட வேண்டியதில்லை!" என்று ஒருவாறு தேறி, மக்களை ஆலிங்கனம் செய்து முத்தமிட்டு மனம் பூரித்து இராஜசபைக்குச் சென்றான்.

புத்திரர்களிருவரும் ஒருவர்க்கொருவர் தழுவிக்கொண்டு சந்தோஷமாய்த் தத்தம் முயற்சிகளை நாடிச் சென்றனர். விஜயசேகரனோ தான் எப்போதும் வழிபடு கடவுளாகிய முருகபிரானைத் தியானித்து முறையிட்டுக்கொள்ளும் அறையிற் சென்று நிற்சலனமாயிருக்கும்படி தன்னாலானமட்டும் முயன்றும் முடியாமல் அவ்வறையை விட்டு வெளிப்பட்டுத் தந்தை தமையன்மார்களிருக்கும் அறைக்கு மறுபடியுஞ் செல்ல அங்கு அவர்கள் கதவைத் தாளிட்டிருப்பதைக் கண்டு அவர்களுட்கார்ந்திருக்குமிடத்திற்கு நேராகப் பின்புறத்தில் நின்று அவர்கள் பேசுவது முழுவதிலும் மனதைப் பூரணமாய்ச்செலுத்திக் கேட்டுக்கொண்டிருந்து மிக்க விசனமுற்று, "இத்தகைய நீசருடைய பந்தத்தில், தந்தையென்றும் தமையனென்றும், எத்தனை நாள் காலங்கழிப்பது, முருகா!" என்று திகைத்துப் பிறகு மனந்தேறிக் "குலசேகரப் பெருமாளையும், அவர் இரு குமாரத்திகளையும், குழந்தை யுற்பத்தியாகில் அச்சிசுவையும், கடவுள் கிருபையால் எல்லா ஆபத்தினின்றும் காப்பது தனது கடமை!" என்று உறுதிபண்ணிக்கொண்டு சந்தோஷமுடன் தன் தாய் இருக்குமிடம் போயினான்.

# ஊழ்வினையும் ஆள்வினையும்

[647-வது பக்கத் தொடர்ச்சி]

இன்னபிற, பெரியோர் நனித்துரைக்கும் நல்லுரைகளை ஆயுங்கால் மாளாத வல்வினையாம்பிராரப்தமும் (ஊழும்) ஒழிக்க இயலும் என்று தேர்வோம். பிராரப்தம் மாத்திரம் எவ்வகையிலும் ஒழிக்கஇயலாதென்று நாம் முன் கண்டது 'முமுக்ஷுக்கள்'' திறத்திலன்று. நாயனாரும்,

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்."

என்று கூறுகின்றார்.

இத்தகையமாளாதவல்வினையை மாய்த்து மாயவன் மலரடி சேர்வதற்குரிய உபாயம் அறிந்துகொள்ளல் அத்தியாவசியம். வினைகளை ஒன்று நூறாக முட்டையிட்டுவளர்க்குந் தன்மையுடையது 'அவா' என்பதை மறத்தலாகாது. அவ்வவாவினாலே இம்மையிலேஎத்தனை இன்னல்கள் வந்தெய்துகின்றன! பகைமைமூட்டிவைப்பது அதுவன்றோ? அதனினும் கொடும் பகைஞன் வேறெவனு மிலன். அது அற்றகாலத்தில் இம்மையும் நன்றே மறுமையும் நன்றே.

"அவாவில்லார்க்கில்லாகுந் துன்பம் அஃதுண்டேற்
றவாது மேன்மேல் வரும்." என்றும்

"வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
ஆண்டு மஃதொப்ப தில்."

என்றும், நாயனார் நன்கு உரைத்தருளினர். 'பற்றின்கணில்லா தறஞ்செய்க' என்றார் மற்றோரும். 'அற்றது பற்றெனில் உற்றது வீடு'' என்றார் குருகூர் மகிழ் மாறன். ஆதலான் வினைகளை வெல்பவன் அவாவில்லானா யிருக்கவேண்டும்.

அவாவில்லா திருக்கவேண்டின் தனக்கென்றுந் தன்னுடைமை யென்றும் அபிமானிக்கின்ற 'தன்னலம்' அற்றிருத்தல் இன்றியமையாது. தன்னலம் அற்றோரே தரணியில் தலைமை பூண்டோர். தன்னல மற்றோர் வேண்டுழித் தன்னையு மிழப்பர். இச் சீரிய தத்துவத்தைக் கலைநயஞ்செறியத் தத்தையின் (கிளி) மூலமாய்த் திருத்தக்கதேவர் தந்தருளு மாற்றைக் காண்போம். "இணைவிழைச்சி விருப்புவான் வேண்டி ஜீவகனும் தாமமார்பனும் இலக்கணையாம் தையலும், தூமங் கொப்புளிக்கும் துகிற்சேக்கைமேல் காம னப்பணைகளாக வைகுகின்றார். அம்மாதின் வனப்பை ஜீவகன் கண்ணிமைக்காது நோக்கி மகிழ்ந்து காதலித்திருந்தால், கண்கள் கருகிக் கண்ணீர்பெருகிற்று. இதனைக் கண்ட இலக்கணை, வேறொரு மாதை நினைந்து அவளைச் சேர்தற் கில்லையென்று அழுகின்றான் போலும், என்று துன்பம் மிகவுடையளாய் வேல்போன்ற கண்கள் தீயுமிழ நாறுசாந் தழித்தாள். மாலையைப் பிய்த்தாள். நன்கலன்கள் சிந்தினாள். கோபங்கொண்டு செம்பொனாழி மணிவிரல் நெரித்தாள். விம்மினாள், புருவங்கள் முறியப்பெற்றனன். செந்தாமரை முகம் வியர்த்தாள். இதைத்தான் 'ஊடல்' என்று கூறுவது. புலத்தலில் புத்தேளுடு இல்லை'யாதலாலும், ஊடுதல்காமத்திற்கின்பம் ஆதலாலும், ஊடலிற் றோன்றவேண்டிய சிறுதுனி காட்டினாள். இதனால் மன்னன் பொற்றாமரையில் கருமுத்துக்கள் சொரிதல் போல, கண்ணொளியால் கருத்துத் தோன்றும் கண்ணீர் சொரிய அவள் சிற்றடிப்போதுபுல்லி, இற்றதென் னாவி யென்று ஏங்கித் தேன்காள் வண்டுகாள் பண்டியான் செய்த பாவப் பயத்தை யார்க்குரைப்பன். நங்கை வரந்தமொழியின்'' என்று, தேன்களையும் வண்டுகளையும் குருவாகக் கொண்டு அவளருளைப்பெறப் பாதத்தில் தவங்கிடந்தான். இக்கோலத்தை அங்கு அவள்வளர்க்கப் பஞ்சரத்தில் அடைத்திருக்கும் பூவையுங் கிளியுங் புழைமுகம் வைத்து நோக்கி'' நம் சேவல் இன்ன



னம் ஊடல் தீர்க்குமிடத்துத் தகாதென்று மனமுருகி நாம் சர்வம். காவலன் மடந்தை யுள்ளம் கற்கொலோ இரும்பு கொல்லோ. நங்கையே பாவையே, ஒன்றுந் தவறிலன் இனி நீ அருளாய்'' என்று தத்தைகூறிற்று. தன்னயங்கருதியுள்ள பூவை "பெற்ற சோற்றையுண்டு கூண்டில் பிணிப்புண்டிருக்கும் நாம் நீதி சொல்லப் போவோமானால் பொற்றொடியாள் மூன்றுநா ளடிசில் காட்டாள். தத்தையீர, பொத்தும் நும் வாயை,'' என்று கழறியது. தன்னலமில்லாத் தத்தையோ பழியொடுமிடைந்ததேனும் சீறடி பரவினார்க்கு வழிபடு தெய்வமாகி வரங்கொடுத்தருளல் வேண்டியிருக்க இவள் அருளா திருக்கின்றாளாதலால்,

ஈன்றதா யானு மாக
விதனைக்கண் டுயிரை வாழேன்
நான்றியான் சாவ லென்றே
நலக்கிளி நூலின் யாப்ப
மான்றவள் மருண்டு நக்காள்
வாழிய வரம்பெற் றேனென்
றான்றவ னரப் புல்லி
யணிநலம் பரவி னானே.

நான் இந்நங்கையைப் பெற்ற தாயாகப் பாவித்து இதனைக் கண்டு உயிர்வைத்திரேன். இக்கூட்டிலிருக்கும் கயிற்றால் உச்சுருக் கிட்டுக்கொண்டு தொங்கிச் சாகின்றேன், என்று நூலினால் தன் கழுத்தில் சுருக்கிட்டுக்கொள்ள, இதனைக் கண்டும் கேட்டு மிருந்த நங்கை மயங்கிச் சிரித்தாள். அப்போது நாயகன் அக்கிளியை நோக்கி 'நீ வாழக்கடவாய்' என்று கூறி 'நான் செய்த தவத்தின் வரம்பெற்றே'' னென்று, 'ஊடலிற் றோற்றவர் வென்றா' ராதலினாலே, அதன் பயன் கூடலிற் காணப்படுவதால், ஆன்றவ னரப் புல்லி அணிநலம் அனுபவித்தான், என்பதாம்.

வினையை வீட்டி வீட்டுநெறி யெய்தற்கு அவாவுந் தன்னலமு அற்றிருத்தற்கு உபாயம் 'பயன் கருதாமை' யாகும். வினை செய்வதாலன்றோ அதனை விலக்க இத்தனை அரும்பாடு படவேண்டியுளது; விட்டிருந்தால் இவ்வருத்தம் ஒன்றும் இல்லையே என்று வினைகளைசெய்யாதிருக்கவியலாதென்பதை முன்னேரிடத்தில் கண்டோம். அக்கருத்தைக் கமலக்கண்ணனும்,

இட்டத்தாற் கன்மத் திழியார் வினையொழியார்
விட்டத்தாற் பேறதனை மேலடையார்—தொட்
டொன்றைச்
செய்யா ரிறைப்பொழுது நில்லார் செறிந்தியல்வர்
மெய்யார் குணத்தெவரு மிக்கு.

என்று கூறுகின்றார். நல்லன செய்தோர் சுவர்க்கபோகம் அனுபவிப்பார் என்பதை

இந்தவெனை வேதத் தியல்கின்றா ரெச்சத்தால்
வந்திறைஞ்சித் தம்வினைபோய் வானிரப்பர்—அந்த
சென்றமரர் நாடணைந்து தேவர்தம்போகத்தை [வவர்
நின்றமர்ந்து துய்ப்பார் நிகழ்ந்து.

என்றும்,

பொன்னகரில் வாழ்வெய்திப் புண்ணியத்தின் றன்
குறையைப்
பண்ணினவர் இவ்வுலகிற் பாடழிந்தே-பின்னடைவர்
காக்கு மறைத்தன்மை கதியடைந்தார் காமத்தாற்
போக்குவரத் தேபெறுவர் பூண்டு

என்றும், கீதை கூறுகின்றதாதலால், பின் எவ்வாறு செய்தால் வினைப்பயன் துய்க்கா திருக்கவியலும் என்ற சங்கை எவர்க்கும் தோன்றுதல் இயற்கையே. இதற்குத் தக்க யுக்தி அக் கீதையிலேயே

பேறுதரு ஈசற்காப் பெட்பிற் செயும்செயலின்
வேறுசெய லானுலக மேவிடுமே—ஈறில்தொடக்
காதலினா லைய அடையும் பயன்றுறந்து
தீதறுமக் கன்மத்தைச் செய்.

மனப்பூர்வமாக ஈசுவரார்ப்பணமாய்ப் பயன்கருதாது செய்கின்ற வினை தளைக்காது; வேறுவிதமாய்ச் செய்தால்தான் பந்திக்கும் என்றும் உபாயங்கூறுகின்றார். இக்கருத்தையே மற்றோரிடத்தும் உறுதிபாக

போன நசையினனைப் புன்புலனின் முத்தனைப்
ஞான நிலைகொண்ட நன்னெஞ்சா—பானதொழில்
வேள்வி யினுக்காக விரும்பி முயல்வானுக்
கூழ்வினை யெல்லாம்போ முடைந்து.

என்றும் கூறுகின்றார். பயன்கருதாது இவ்வாறு செய்யும் வினைதான் 'சத்துவ' மானதென்று மற்றும்,

மேவும் பயனில் விருப்பிலரால் மாமறையின்
தாவில் விதிப்படியே தாமதனை—ஒவலறச்
செய்தல்கடன் என்னுமொரு சிந்தையினாற் செய்யு
மெய்தருமோர் சத்துவமா வேண்டு [மகம்

என்றும் கூறிப் பின்னரும் ஓரிடத்தில்,

இக்கரும மெல்லா மிபற்றல்கட னேயெனினும்
அக்கருமத் தாருமபி மானமும்—புக்க
பயனுமற விட்டுப் பிரிந்தவற்றைத் திண்ணம்
செயல்கடனென் றென்மதமாம் தேர்.

தானதருமம் ஆகிய புண்ணியகருமங்கள் செய்ய வேண்டியது கடமையேஎனினும் தன்னுடையதென்ற அபிமானமில்லாது அன்புடன் அதனால் பிரதிபிரயோஜனம் விரும்பாமல் செய்யவேண்டியதுதான் கடமை என்பது என்கருத்து'' என்று கீதாசாரியன் தன் உள்ளக்கருத்தோடு, வினை பாதிக்காத-நுகர்தற்கு வாராத-தத்துவத்தைச் சொல்லியருளினான். இவ்வாறு செய்தாலன்றோ ஊழ்வினை யெல்லா முடைந்துபோகும். இவ்வாறே நம் தமிழ்நாட்டு வள்ளல்களும் செய்தார்கள். ஆய் என்பான் அறஞ்செய்த ஆற்றை அழகிய வாக்கியங்களால் ஏணிச்சேரி முடமோசியார்,

இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வாணிக னாஅ யல்லன்
பிறருஞ் சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன் றவன்கை வண்மையே.

என்று கூறுவார். பயன் கருதி அறஞ் செய்வோர் 'தரும வியாபாரிகள்' ஆவார்கள். யாதொரு பயனுங் கருதாது சான்றோர்சென்ற நெறியென ஆற்றுதலே பெரியோர் இயல்பு; கடனுமாகும். அவ்வாறு கருதித் 'தன்னுயிர்க் கிரங்கான் பிறவுயி ரோம்பும் மன்னுயிர் முதல்வன்' முன்னிட்டே இவ்வுலக முண்டு. உலகமென்பது உயர்ந்தோர் மாட்டன்றோ? அவர்கள் பாததூளி படுதலால் உலகம் பாக்கியம் செய்தது. ஒன்றானு முள்ளான் பிறர்க்கே இறுதிக் குழந்தான் தானேயானார் திறத்தைக் கடலுண் மாய்ந்த இளம்பெருவழுதி,

உண்டா லம்மவிவ் வுலக மிந்திர
ரமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்

புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனி
னுலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்விலர்
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே.

சாவா மருந்தெனினும் விருந்தோடல்லது உண்ணு மலும் எவர்மாட்டும் பகையின்றியும், அஞ்சுவதஞ்சல் அறிவார்தொழில் ஆதலின், மற்றவர் அஞ்சத்தகுந்த துன்பத்திற்குத் தாமும் அஞ்சியும், புகழெனின் உயிரைக் கொடுத்தும், பழியெனின் உலகுடன்பெறினும் வெறுத்தும், மனக்கவற்சி யின்றியும் ஒழுகும் பண்பு வாய்ந்த அத்தகையினராகித் தமக்கென்று முயலாது பெரிதும் பிறர்க்கென்று முயலும் பெரியோர் இருத்தலாலே இவ்வுலகம் உண்டுகாண்." என்று கூறுகின்றார். இத்தகைய மாட்சிமைப்பட்டோர் இருக்கும் நிலந்தான் நாடாகும்—வசித்தற்குரிய தகுதியுள்ள நிலனாகும். இக்கருத்தை வெகு நன்றாக ஔவையார்

நாடா கொன்றோ காடா கொன்றோ
வலவா கொன்றோ மிசையா கொன்றோ
வெவ்வழி நல்லவ ராடவ
ரவ்வழி நல்லை வாழிய நிலனே.

நிலமே நீ ஒன்றில் நாடேயாக ஒன்றிற் காடேயாக, ஒன்றிற் பள்ளமேயாக ஒன்றில் மேடேயாக, எவ்வாறாயினும் எவ்விடத்து நல்லவ ரிருக்கின்றார்களோ அவ்விடத்து நீயும் நல்லை யாவை என்று புகன்றார். இத்தகையினர் தனக்கொன்றுடைமை உண்டென்பதின்றித் தன்னையுமிழந்து பயனுங் கருதாது தருமஞ் செய்து தலைவன் தமராய்த் தத்பதம் சேருவர்.

அன்னவர்களில்—பயன் கருதாது அறமாற்றுபவர்களில் ஒருவனை கன்னனைப்பற்றி நாம் அறிவோம்.

# ஆண்டாள்

## 2. கல்வியும் கவித்திறமையும்.

[645-வது பக்கத் தொடர்ச்சி]

திருவாசகத்திலும் குயிற்பத்து இருக்கின்றது. ஆயினும் ஆண்டாள் பாடிய குயிற்பத்து அந்நடையில் காணப்படவில்லை. எனினும் அங்குள்ள சொற்றொடர்களே இங்கு மிருப்பதால், இலக்கிய ஆராய்ச்சியில்எவ்வநுமானப்பொருந்துமோ அதனையே கொள்க.

நாச்சியார் 4-ம் திருமொழி "தெள்ளியார் பலர்" என்பது திருநாவுக்கரசர் திருக்குறுந்தொகை பாடிய யாப்பிலிருக்கக்காண்கின்றோம். இப்பதிகம்கலிவிருத்த இலக்கணத்தின்படி "நேர் பதினொன்றே, நிரைபனிரெண்டே" யென்னும்கட்டளை பெற்றுவரும். *ஒருவரியின் முதலசை நேரசையாயின்,அவ்வரியில், 11உயிரெழுத்துக்கள் (உயிர்மெய்யெழுத்து) பெற்றும்,நிரையசை முதலசையாயின், 12 உயிரெழுத்துக்கள் (உயிர்மெய் யெழுத்துக்கள்) பெற்றும் வருவதுகாண்க. இப்பதிக வோசையினினிமையே மதுரகவிக்கும் † திருநாவுக்கரசருக்கும் காரணப்பெயர்கள் முறையே தந்தனவென் றனுமானிக்கின்றோம். இதன் யாப்பிலக்கணம் நன்குணர்ந்த கோதையார் தாமும் ஒருபதிகம் இக்கலிவிருத்தங்களாற் பாடினர். திருநாவுக்கரசு நாயனார் பாடிய "சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள்" என்னும் திருப்பதிகத்தை, ஆண்டாள் பாடிய "விண்ணீலமேலாப்பு" என்னும் மேகவிடுதூது நினைப்பூட்டுகின்றது. ‡ முன்னதில் அகத்திணை மரபில் அப்பர் தன்னை ஒரு பெண்ணுப் பாவித்து புருஷோத்தமனை பரம்பொருளை அழைக்குமாறு, குயில் நாரை முதலிய அஃறிணைப்பொருள்களைத் தூதுசெல விடுகின்றனர். ஆண்டாளோ உண்மையிற் பெண்பாலாய்ப் புருடோத்தமனைக் கணவனாக வரிப்பதால், இப்பதிகம் ஏனைய ஆண்கவிராஜர்களால் பாடிய எதனினும் சிறந்து விளங்கும். ஒரு கூத்தாடுமேடையில் பெண் வேஷம் பூண்டு ஒருவன் எவ்வளவு $ விமரிசையாய் நடிப்பினும், உண்மையில் பெண்பாலே வந்து நடிப்பது போலாகாது. ஆதலால் "தூது" பாடுவதில் ஆண்டாள் பதிகமே தனியே சிறந்து விளங்குகின்றது.

ஆண்டாள், சுந்தரமூர்த்திநாயனாரது இசைத்தமிழில் ஈடுபட்டது சிற்சில இடங்களில் விளங்கும். 9-வது திருமொழியாகிய "சிந்தூரச் செம்பொடி" யென்னும் திருப்பதிகம் நட்டராகச்சந்தம் குற்றமின்றிவிளக்கும்.சுந்தரரோ பத்தாம் பாட்டில் திருக்கடைக்காப்பு செய்து தன்னைக்குறித்துப் பாடுவர். அங்ஙனமே ஆண்டாளும் பெரியாழ்வாரும் பெரும்பாலும் 10-ம் செய்யுள் திருக்கடைக்காப்பாய்த் திருவாய்மலர்ந்தனர்.

சிலப்பதிகாரம் தேவாரம் திருவாசகங்கள் மாத்திரமன்றிப் புறநானூறு அகநானூறு முதலிய சங்கநூல்களும்* திருக்குறளும் சங்கவிலக்கணமாகிய தொல்காப்பியமும் ஆண்டாள் கரைகண்டன ரெனினும் பொருந்தும். சமணநூற்களும் சாக்கியநூல்களான மணிமேகலை முதலியனவும் இவ்வம்மையார் கசடறக் கற்றறிருந்தனரென்பதை ஆங்காங்குச் சில சொற்றொடர்களாற் காண்கின்றோம். இவ்வாறு தனக்கு முன்னிருந்த வைணவம் அல்லாது ஏனைய மதநூலாசிரியர்களைக் கற்றதுமன்றிச் செந்தமிழ் நடையில் வைணவத்தொண்டு ஆண்டாளைப்போல் செய்தவர் சிலரே † தன் தந்தையாகிய விஷ்ணுசித்தர், பிள்ளைத் தமிழ்முறையில் கண்ணன் திருவவதாரமுதல் தாலாட்டு அம்புலி முதலிய பருவங்களை முறையே விளக்கிக்காட்டியவாறு, பெண்பிள்ளைகளுக்குரிய சிற்றில்பருவ முதலியவைகளைச் சிறப்பித்துத் தந்தையின் செய்கையைப் பூர்த்தி செய்வதுபோல் ஒருவகைப் பிள்ளைத்தமிழ் கோதையார், திருப்பாவையிலும் தமது 14 திருமொழிகளிலும் செய்வாராயினர்.

ஆண்டாள் தன் தந்தைக்குத் தானே ஏகபுத்திரியாய்ச் சர்வசுதந்தரங்களுக்குஞ் சட்டப்படி பாத்திரமாவதுபோல் கல்வித்திறத்திலும் கவித்திறத்திலும் பெரியாழ்வாருக்குப் பற்பலவிதங்களில் நெருங்கி ஒப்பிடக்கூடியவரா யிருக்கின்றார். அவர் எதை விட்டாரோ, அதை அம்மையார் தமது திருமொழிகளில் பூர்த்திசெய்வது மிகவும் ஆச்சரியத்தை விளைவிக்கும். பெரியாழ்வார் திருமொழி முதற்பத்தின் திருக்கடைக்காப்புச் செய்யுளும் "வாரணமாயிரம்" என்பதின் திருக்கடைக்காப்பும் இல்லற விளக்கத்தைக் குறிக்கும்.* "வாரணமாயிரம்" என்பது திருமணமாயின், பட்டர்பிரான் முதல்திருமொழி கண்ணன் திருவவதாரம், உறவினர் வந்துகாணல், திருத்தாலாட்டு, அம்புலி நோக்கல், செங்கீரையாடல், சப்பாணிகொட்டல், தளர்நடை, அச்சோ, புறம்புல்கல் என்பன திருமணப் பயன்களாகும். இவ்வாறே ஆண்டாள் திருப்பதிகங்களில் உள்ள விஷயங்களும் பெரியாழ்வார் திருமொழியிலும் தர்க்க வொழுங்கில் இணக்கக் கூடிய தன்மைகளுடையனவாம்†.

* தெள்ளி யார்பலர் கைதொழும் தேவனார்" —உயிர் 11 (உயிர்மெய்)
பழகு நான்மறை யின்பொரு ளாய்மத" -உயிர்12 (உயிர்மெய்)

† விண்ணு ளார்தொழு தேத்தும் விளக்கினை
மண்ணு ளார்வினை தீர்க்கு மருந்தினைப்
பண்ணு ளார்பயி லுந்திருக் கோளிலி
அண்ண லாரடி யேதொழு துய்ம்மினே.

திருக்கோளிலி - திருக்குறுந்தொகை (அப்பர்) 2.

திரிதந் தாகிலு தேவ பிரானுடைக்
கரிய கோலத் திருவுரு காண்பன்நான்
பெரிய வண்குரு கூர்நகர் நம்பிக்காள்
உரிய னாயடி யேன்பெற்ற நன்மையே.

மதுரகவி - (கண்ணிநுண் சிறுதாம்பு) 3.

பூம கன்புகழ் வானவர் போற்றுதற்
காம கன்னணி வாணுதல் தேவகி
மாம கன்மிகு சீர்வசு தேவர்தம்
கோம கன்வரில் கூடிடு கூடலே.

4-வது திருமொழி. (ஆண்டாள்) 3.

‡ கண்டகங்காள்முண்டகங்காள்கைதைகாள்நெய்தல்காள்
பண்டரங்க வேடத்தான் பாட்டோவாப் பழனத்தான்
வண்டுலாம் தடமூழ்கி மற்றவனென் றளிர்வண்ணம்
கொண்டநாள் தானறிவான்குறிக்கொள்ளா தொழிவானே?

அப்பர் 2.

சாங்கமாகடல்கடைந்தான் தண்முகில்காள்வேங்கடத்துச்
செங்கண்மால் சேவடிக்கீ ழடிவீழ்ச்சி விண்ணப்பம்
கொங்கைமேல்குங்குமத்தின்குழம்பழியப்புகுந்தொருநாள்
தங்குமே லென்னாவி தங்குமென் றுரையீரே.

ஆண்டாள்-மேகவிடு தூது.

$ துணையார முயங்கிப்போய்த் துணைசேரு மடநாராய்
பணையார வாரத்தான் பாட்டோவாப் பழனத்தான்
கணையார விருவிசும்பிற் கடியரணம் பொடிசெய்த
இணையார மார்பனென் னெழினலமுண் டிகழ்வானே?

அப்பர் 7

விண்ணீல மேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள்!
தெண்ணீர்பாய் வேங்கடத்தின் திருமாலும் போந்தானே
கண்ணீர்கள் முலைக்குவட்டில் துளிசோரச் சோர்வேனை
பெண்ணீர்மை யீடழிக்கு மிதுதமக்கோர் பெருமையே?

ஆண்டாள் 8-வது திருமொழி 1.

* பத்துப்பாட்டில் முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி இவற்றை நோக்குக.

† செம்மை யுடைய திருவரங்கர் தாம்பணித்த
மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டுசித்தர் கேட்டிருப்பர்
தம்மை யுகப்பாரைத் தாமுகப்ப ரென்னுஞ்சொல்
தம்மிடையே பொய்யானால் சாதிப்பா ராரினியே.

11-வது திருமொழி (தாமுகக்கும்) 10.

* ஆயனுக் காகத்தான் கண்டக னாவினை
வேயர்புகழ் வில்லிப்புத் தூர்கோன் கோதைசொல்
தூய தமிழ்மாலை ஈரைந்தும் வல்லவர்
வாயு நன்மக்களைப் பெற்று மகிழ்வரே.

ஆண்டாள்.

ஆய்ச்சியன் றாழிப்பி ரான்புறம் புல்கிய
வேய்த்தடந் தோளிசொல் விட்டுசித்தன் மகிழ்ந்து
ஈந்த தமிழிவை ஈரைந்தும் வல்லவர்
வாய்த்த நன்மக்களைப் பெற்று மகிழ்வரே

பெரியாழ்வார்

†பெரியாழ்வார் 4-ம் பத்தில் 3-வது திருமொழியாகிய திருமாலிருஞ்சோலைமலையின் மாட்சியும், ஆண்டாள் 9-வது திருமொழியில் திருமாலிருஞ்சோலையில் பெருமானை வழிபடுவதும் ஒன்றன்பின் ஒன்றை வைத்துக் காண்க.



# யாப்பிலக்கணம்

## செய்யுள்—ஆசிரியப்பா

[654-வது பக்கத் தொடர்ச்சி]

செப்பலோசைக்கு உரிய பா வெண்பா ஆவதுபோல் அகவலோசைக்கு உரிய பா ஆசிரியப்பாவாகும். 'கேட்பவர் கேளுங்கள்' என்றுரைக்குந் தன்மையில் இசைப்பது செப்பலோசை என்றும், ஒருவனை அழைத்து 'நீஇதுகேள்' என்றுரைக்குந் தன்மையில் இசைப்பது அகவலோசை என்றும், செப்பலோசையைப் போல் அகவலோசையும், ஏந்திசை தூங்கிசை ஒழுகிசை என மூவகைப்படுமென்றும் முன்னர் (534-வது பக்கம்) விரித்துரைத்திருக்கின்றோம்.

ஆசிரியப்பாவிற்கு உரிய சீர், இயற்சீர் எனப்படும் ஈரசைச்சீர்கள். தேமா புளிமா கருவிளம் கூவிளம் என்னும் அந் நான்குவாய்பாட்டு இயற்சீர்களும் ஆசிரியப்பாவினுள் வரும். ஆயினும், இயற்சீரும் வெண்சீரும் தவிர மற்றச்சீர்கள் வெண்பாவில் ஒருபோதும் வரலாகாது என்பது போன்ற நியதி ஆசிரியப்பாவிற்கு இல்லை. ஆசிரியப்பாவில் பெரும்பாலும் இயற்சீர்களே வரவேண்டுமானாலும், நான்குகாய்ச்சீர்களும், தேமாங்கனி புளிமாங்கனி என்னும் இரண்டு கனிச்சீர்களும் இடைஇடையே சிற்சிலவரினும் பிழையில்லை. கருவிளங்கனி, கூவிளங்கனி என்னும் நிரைநடுவாகிய கனிச்சீர்கள் ஆசிரியப்பாவினுள் வரலாகாது என்பர்- இதனைப் பின்னர் விரித்துரைப்போம்.

இனி, ஆசிரியப்பாவிற் குரிய தளை, ஆசிரியத்தளை. அது நேரொன்றிய ஆசிரியத்தளையென்றும், நிரையொன்றிய ஆசிரியத்தளையென்றும் இருவகைப்படுமென்பதை முன்னரே கூறியிருக்கின்றோம் (188-வது பக்கம்). ஆயினும், வெண்டளைதவிர வேற்றுத்தளைவாராதென்னும் நியதி வெண்பாவிற்கிருப்பதுபோல்

ஆசிரியப்பாவிற் கில்லை. ஓ ராசிரியப்பாவினுள் மற்றத் தளைகள் சிற்சில வரினும் பிழையாகாது.

ஆசிரியப்பாவும், வெண்பாவைப்போல் நான்கு சீர்கள் கொண்ட அளவடிகளால் நடக்கும். சில ஆசிரியப்பாக்களில்,குறளடியும் சிந்தடியும்சிற்சில இடையே வரினும் வரலாம். ஆசிரியப்பாக்களுள் ஏதேனும் இரண்டொரு அடிகள் ஐந்துசீர் பெற்று வருதலும் உண்டு. இது மிக அருமை. மூன்றடி முதல் எத்தனை அடிகள் வேண்டுமெனினும் ஆசிரியப்பாவில் வருதல் கூடும். அவை பாடுவோனது பொருள்முடிவைக் குறித்து நடக்கும்.

ஆசிரியப்பாக்களெல்லாம், ஏ ஓ என் ஈ ஆ ஆய் ஐ என்றவற்றுள் ஒன்றினை இறுதியிற்பெற்று முடிய வேண்டும். இவைகளில், ஏ என்னும் எழுத்தில் முடிவதே மிக்க சிறப்புடைத்தென்று கருதப்படுகின்றது.

இவ்வாறு, பெரும்பாலும் இயற்சீரும் ஆசிரியத்தளையும்.பெற்ற அளவடிகள் மூன்றிற்குக் குறையாமல் உடையதாய், ஏ ஓ என் ஈ ஆ ஆய் ஐ என்றவற்றிலொன்றினால் முடிந்து, அகவலோசையுடன் இசைக்கின்றபா ஆசிரியப்பா எனக்கொள்க. ஆசிரியன் எடுத்தியம்புவதுபோல் பொருளை அறிவிக்கும் பான்மையில் இசைப்பதால் இதற்கு ஆசிரியப்பா என்னும் பெயர் அமைந்தது. அகவலோசை உடைமையின் அகவற்பா என்ற பெயரும் இதற்குளது.

அகவலோசை, ஏந்திசையகவலும் தூங்கிசையகவலும் ஒழுகிசையகவலும் ஆவது, அப்பாட்டின்கண் அமைந்திருக்கும் ஆசிரியத்தளையின் வகையைப் பொருந்தியதாகும்.

நேரொன்றிய ஆசிரியத்தளை மிகுந்திருக்கும் ஆசிரியப்பா ஏந்திசை அகவலோசையும், நிரையொன்றிய ஆசிரியத்தளை மிகுந்திருக்கும் ஆசிரியப்பா தூங்கிசை அகவலோசையும், இருவகை ஆசிரியத்தளைகளும் விரவி வரும் ஆசிரியப்பா ஒழுகிசை அகவலோசையும் உடைய்தாயிருக்கும். (இவைகளுக் கிடையிடையே வேற்றுத்தளைகள் வரினும் தீதில்லை.)

இப் பொதுவிலக்கணத்திற் கிணங்கிவரும் ஆசிரியப்பாக்கள், சிறிதுசிறிது வேறுபட்டு நான்கு வகை ஆகும். அவைதாம்,

1. நேரிசை யாசிரியப்பா
2. நிலைமண்டில வாசிரியப்பா
3. அடிமறிமண்டில வாசிரியப்பா
4. இணைக்குற ளாசிரியப்பா

என்பனவாம். இவைகளின் சிறப்பிலக்கணத்தைக் கற்பதோடு ஆசிரியப்பாக்களுக்குரிய பொது இலக்கணங்களையும் கவனித்துக் கொள்ளலாம்.

### 1. நேரிசை யாசிரியப்பா.

ஆசிரியப்பாவிற்குரிய அகவலோசை முதலிய இலக்கணங்களைப் பெற்று வரும் பாட்டின் ஈற்றிற்கு அயலடிமாத்திரம் மூன்றுசீர்களுடைய சிந்தடியாயிருக்குமாயின், அப் பா நேரிசைஆசிரியப்பா வாகும். ஈற்றுக்கு அயலடியை எருத்தடி என்று வழங்குவர். நால்வகை ஆசிரியப்பாக்களிலும், நேரிசை ஆசிரியப்பா மிக்க ஓசைநயமும் புகழும் சிறப்பும் உடையதாய்க் கருதப்படுகின்றமை பற்றி அதற்கு நேரிசை என்னும் பெயர் வந்தது.

புறநானூறு,அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு அனைய சங்கநூல்களில் வரும் செய்யுள்கள் பெரும்பான்மை நேரிசை ஆசிரியப்பாக்களே.

அவரோ வாரார் தான்வந் தன்றே
புதுப்பூ வதிர லூஅய்க்
கதுப்பற லணியுங் காமர் பொழுதே.
—ஐங்குறுநூறு.

இது மூன்றடியால் வந்த நேரிசை யாசிரியப்பா. மூன்றடிக்குக் குறைந்த ஆசிரியப்பா இல்லை. இதனில் ஈற்றுக்கு அயலடியாகிய 'புதுப்பூ வதிர லூஅய்க்' என்பது முச்சீரடியாயிருப்பதால் இது நேரிசை யாசிரியப்பா. மற்ற இரண்டு அடிகள் ஒவ்வொன்றும் நான்கு சீர்கள் கொண்ட அளவடிகள். புதுப்பூ-வதிர, காமர்-பொழுதே, என்னும் இவை யிரண்டும் இயற்சீர் வெண்டளைகள் ஆவது தவிர, மற்றத்தளைகள் எல்லாம் ஆசிரியத்தளைகள் (வெண்பாவைப் போல, ஓரடியின் ஈற்றிற்கும் மற்ற அடியின் முதலிற்கும் உள்ள தளையமைப்பை ஆசிரியப்பாவில் கவனிக்கவேண்டாம்).

பொழுதே—என்று ஏகாரத்தில் முடிந்திருக்கின்றது இப்பாட்டு.

அம்ம வாழி தோழி பன்மலர்
நறுந்தண் சோலை நாடுகெழு நெடுந்தகை
குன்றம் பாடா னாயி
னென்பயஞ் செய்யுமோ வேலற்கவ் வெறியே
—ஐங்குறுநூறு.

இது நான்கடியால் வந்த நேரிசை ஆசிரியப்பா. ஈற்றுக் கயலடி முச்சீரடியா யிருப்பதும், வெறியே என, பாட்டு ஏகாரத்தில்முடிவதுங் காண்க. இதனில் வந்திருப்பன பெரும்பாலும் ஆசிரியத்தளைகளே. ஆயினும், என்பயஞ்—செய்யுமோ, செய்யுமோ—வேலற்கவ், எனவெண்டளைகளும்; நாடுகெழு—நெடுந்தகை, வேலற்கவ்—வெறியே, எனக் கலித்தளைகளும் வந்திருக்கின்றன. இனி, நாடுகெழு என்பதை வகையுளியால், நா-டுகெ-ழு எனக் கூவிளங்கா யாக்காமல் நா-டு-கெழு எனத் தேமாங்கனியாய்க் கொள்வோமாயின், நாடுகெழு—நெடுந்தகை, என்பது வஞ்சித்தளையும் ஆகும். ஆசிரியப்பாவில், கருவிளங்கனியும் கூவிளங்கனியுந்தான் வரலாகாது. தேமாங்கனியும் புளிமாங்கனியும் வரலாம். (வகையுளி என்பதைப் பற்றிப்பின்னர் விரித்துரைப்போம்.)

அமிழ்தத் தன்ன வந்தீங் கிளவி
யன்ன வினியோள் குன்ற மின்ன
வின்னா வரும்படர் செய்யு மாயி
னுடனுறை வரிதே காமங்
குறுக லோம்புமி னறிவுடை யோரே.
—குறுந்தொகை.

இது ஐந்தடிகளால்வந்த நேரிசையாசிரியப்பா. இதனில் வந்தீங் - கிளவி, யன்ன - வினியோள், வின்னா-வரும்படர், வரும்படர்-செய்யு, னறிவுடை - யோரே, என்பன வெண்டளைகள் ஆதல் தவிர மற்றவை ஆசிரியத்தளைகள். இதனில் இயற்சீர்தவிரவேறு சீர்களில்லை.

கால்பார் கோத்து ஞாலத் தியக்கும்
காவற் சாகா டுகைப்போன் மாணின்
ஊறின் றாகி யாறினிது படுமே
யுய்த்த றேற்றா னாயின் வைகலும்
பகைக்கூ ழள்ளற் பட்டு
மிகப்பஃ றீநோய் தலைத்தலைத் தருமே.
—புறநானூறு.



இது ஆறடியால் வந்த நேரிசையாசிரியப்பா. ஒன்றிரண்டு வெண்டளைகளும், யாறினிது - படுமே, என்னுங் கலித்தளையும் போக மற்ற ஆசிரியத்தளைகளில் பெரும்பான்மைநேரொன்றிய ஆசிரியத்தளையாயிருத்தலால் இப்பாட்டில் ஏந்திசை அகவலோசை அமைந்திருப்பது காண்க. பாட்டின் இறுதியில் ஏகாரம்; ஈற்றிற் கயலடி முச்சீரடி.

வைக றோறு மின்பமு மிளமையு
மெய்கனை நிழலிற் கழியுமிவ் வுலகத்துக்
காணீ ரென்றலோ வரிதே யதுநனி
பேணீ ராகுவி ரையவென் றோழி
பூணணி யாகம் புலம்பப் பாண
ரயிர்ப்புக்கொண் டன்ன கொன்றையந் தீங்கனி
பறையறை கடிப்பி னறையறையாத் துயல்வர
வெவ்வளி வழங்கும் வேய்பயி லழுவத்
தெவ்வ மிகூஉ மருஞ்சுர மிறந்து
நன்வா யல்லா வாழ்க்கை
மன்னாப் பொருட்பிணிப் பிரிதும்யா மெனவே
—நற்றிணை.

பதினோரடிகளால் வந்த இந்த நேரிசை ஆசிரியப்பாவில், இருவகைஆசிரியத்தளைகளும், வேற்றுத்தளைகளும் விரவி ஒழுகிசை அகவலோசை அமைவது காண்க.

இரும்பிழி மகாஅரிவ் வழுங்கன் மூதூர்
விழவின் றாயினுந் துஞ்சா தாகும்
மல்ல லாவண மறுகுடன் மடியின்
வல்லுரைக் கடுஞ்சொ லன்னை துஞ்சாள்
பிணிகோ ளருஞ்சிறை யன்னை துஞ்சிற்
றுஞ்சாக் கண்ணர் காவலர் கடுகுவர்
இலங்குவே லிளையர் துஞ்சின் வைஎயிற்று
வலஞ்சுரித் தோகை ஞாளி மகிழு
மரவவாய் ஞமலி மகிழாது மடியிற்
பகலுரு வுறழ்நிலாக் கான்று விசும்பி
னகல்வாய் மண்டில நின்றுவிரி யும்மே
திங்கள்கல் சேர்பு கனையிருண் மடியி
னில்லெலி வல்சி வல்வாய்க் கூகை
கழுதுவழங் கியாமத் தழிதகக் குழறும்
வளைக்கட் சேவல் வாளாது மடியின்
மனைசெறி கோழி மாண்குர லியம்பு
மெல்லா மடிந்த காலை யொருநா
ணில்லா நெஞ்சத் தவர்வா ரலரே—யதனா
லரிபெய் புட்டி லார்ப்பப் பரிசிறந்
தாதி போகிய பாய்பரி நன்மா
நொச்சி வேலித் தித்த னுறந்தைக்
கன்முதிர் புறங்காட் டன்ன
பன்முட் டின்றாற் றோழிநங் களவே.
—அகநானூறு.

இது இருபத்துநான்கடிகளால் வந்த நேரிசையாசிரியப்பா. இதனில், 18 வது அடியில், 'யதனா' என்று ஒரு சீர் அதிகமாயிருத்தல் காண்க. இவ்வாறு அகவற்பாவில் ஒவ்வோரடி ஐந்துசீரடியாய் மிகவும் அருகி வருதல் கூடும். இவ்விடயத்தைப் பின்னர் விரித்துரைப்போம்.

## கம்பராமாயணம்

### அயோத்தியா காண்டம் — 5. தைலமாட்டு படலம்.

[652-வது பக்கத் தொடர்ச்சி.]

எஞ்சிய உடம்பும் எய்திய பெரும்புகழ்.

திருமத்தின் வதனமென்னத் தோன்றியவத் தனி வெண்திங்கள், மிதிலையர்கோன் திருமாமகள்தன் நீர்க்குமிழியின் மெல்லிய சீரடிகள் வருந்தாவண்ணந் தடந்தோறும் பஞ்சினைப் பரப்பியதேய்க்கும் தண்ணிலா விரிக்க, அஞ்சனக் குன்றமன்ன அழகனும், அவனையே மீண்டும் பொன்னினால் போர்த்ததொக்கும் இளவலும் வனத்தூடே வழிநடப்பா ராயினர். அன்னகாலை, அருவிபாய் கண்ணும் புண்ணாய் அழிகின்ற மனமுந்தானுமாய்க் கடிகையோ ரிரண்டுமூன்றிற் கடிநகர் அயோத்திமீண்ட சுமந்திரன், வசிட்டனைத்தொழுது உற்றது சொல்ல, "அந்தோ முடிந்தனனே மன்னன்" என்னுந் துயருடைத் துணுக்கத்தினால் இற்ற நெஞ்சினோடும், முடிவெலாம் உணர்ந்த அம்முனிவன், மேலை விதியின்வலியினை உன்னி, விம்மினனாய்ச் சுமந்திரனோடும் பொன்திணி மன்னன் கோயில் புக்கான். நம்பிக்கைக் கெதிராக நம்புதல் மாந்தர்தம் பேதைமனத் தியற்கை. சென்றானேயானும் இராமன் ஒருகால் மாறிய மனத்தனாகித் தேருடன் மீளினும் மீளலாம் என்ற நசையின்னும் உலராக் கருத்தினராய்த் தேரின் வரவு நோக்கியிருந்தவரங்கு விரைந்துசூழ்ந்து நோக்குதலும், கார்கொண்ட மேனியானைக் காணாது கண்ணில் வற்றா நீர்கொண்ட அவ் வெறுந்தேர்ப் பாகன் நிலைகண்டு தளருமளவில், இரதம் மீண்டதென்பதைக்கேட்டவம் மன்னவன்,வரதனும் வந்தனனென்ன மயக்கந்தீர்த்து, தன் தாமரையன்ன கண்கள் பொருக்கென விழித்துநோக்கி எதிர்நின்ற மர்தவனை "வீரன் வந்தானோ" வென ஆர்வமுடன் வினயதற்கு, இல்லை என்று உரைக்கலாற்றாது ஏங்கிநின்ற அன்னான் முகமே, நம்பிநடந்திலன் என்னும் சொல் இயம்புதலும் அரசன் ஒடுங்கிச் சோர்வடையவே வெந்துயருற்ற வசிட்டன், "யான் இவ்வல்லல் காண்கிலேன்" என்னா அகலப்போனான். பின்னர் நாயகன் தன் பாகனை நோக்கி எஞ்சிய ஊக்கமோடு, "நம்பி சேயனோ அணியனோ" என்று கேட்க, அவன், "தம்பியும் மனைவியும் உடன்வர நம்பி கானகம் போயினான்" என்னாமுன்னம் மன்னவன் ஆவிபோனான். தனுவே துணையாய்த் தருமமேகவசமாய் மனுவென்ற நீதியோடு, மன்னுயிரெல்லாம் தன்னுயிர்போல இவ்வுலகெலாம் அறுபதினாயிரமாண்டு ஓம்பியதன்றியும், குன்றளிக்குங் குலமணித்தோள் சம்பரனை வேரோடுந் தொலைத்து இந்திரற்குப் பொன்னகர் தந்தருளிய தயரதன் முடிந்தவாறு இவ்வாறு. அந்த நன்றியுடைய இந்திரன் முதல்வ ராய கடவுளர் யாரு மீண்டிச் சந்திர னனைய தாங்கோர் மானத்தின் தலையிற் றாங்கி

வந்தன னெந்தை தந்தை யெனமனங்களித்து வள்ளல் உந்தியா னுலகி னும்பர் மீள்கிலா வுலகத் துய்த்தார்.

உற்றதோர் இழவினை உணர்ந்தனள் கோசலை. வெயிற்படு புழுவென வெந்து, அருந்துணை யிழந்த அன்றிற் பெடையென அரற்றி, "எங்களை நீத்துத் தானே போனனே" என்று, நீர்நின்றகன்ற மீனை போல் மெய்தடுமாறி, "இன்றே வந்து அஞ்சல் எனுது எம்மகன் என்பான் கொன்றான் அன்றே தந்தையை" எனக்குலைந்து,

நோயும் மின்றி நோன்கதிர் வாள்வே லிவையின்றி
மாயுந் தன்மை மக்களி னுலோ மறமன்னன்
ஏயுஞ் ஞெண்டு மிப்பியு மாகங் கனிவாழை
வேயும் போன்று னென்று மயங்கா விழுகின்றாள்.

தன்மகன் அரசிழந்தானெனச் சிறிதும் வருந்தினளல்லள் கோசலை, அம்மகனை இழக்கவே ஆருயிர் அஞ்சினள். மற்றிங்குத் தன் நாயகனை இழக்கவும், அம்மகனையே வெறுத்துத்துறந்த குலக்கற்பினளாய் விளங்குகின்றாள். "என்மகன் என்பான்" என்றவாற்றால் பொருந்தா முறைப்பெயர் தாங்கிய போலிமகனென்றகற்றியது அவள் மனம். இராமனுக்கு இடையூறாய் நின்ற பரதனைத் தன்மக னல்லன் என வெறுத்தனன் தயரதன். கோசலை தன் நாயகனைக் காக்கா இராமன் தன் மகனல்லனென மறுத்துவிட்டனள். இவ்வாறு இங்கு இராமனை நொந்துரைத்தற்குரியதோர் மனநிலையைக் கோசலை எய்தவேண்டியது அவளுக்குக் கம்பர் கற்பித்திருக்கின்ற குணங்களின் ஒற்றுமையைக் காப்பதற்கு இன்றியமையாததாகின்றது. ஏனெனில்,

"கொடியாய், கெட்டவொழுக்க முள்ளவளே, கைகேயி, நீ மனோரதங்களைப் பெற்றவளாக இரு; அரசரைக் கைவிட்டுப் பகையற்ற இராச்சியத்தை உன் கருத்தின்படி அனுபவி. என்னைவிட்டு இராமனுஞ் சென்றான், கணவருஞ் சுவர்க்கம் சென்றார்."

என வான்மீகத்தில் கோசலை கைகேயியைப் பழித்துரைக்கும் வாசகங்களைக் கம்பர் ஏற்றுக்கொண்டு,

வடித்தாழ் கூந்தற் கேகய மாதே மதியாலே
பிடித்தாய் வையம் பெற்றனை போா வரமின்னே
முடித்தா யன்றே மந்திரம்..........

[அழகுடன் தொங்குகின்ற கூந்தலையுடைய, கேகய அரசன் புதல்வியே, உன் புத்தியாலே இப்பூமியைக் கைப்பற்றிக் கொண்டனை; மாற்ற முடியாத வரங்களைப் பெற்றனை; இப்பொழுதே (இவ்வரசனைக்கொன்று) உன் சூழ்ச்சியை முடித்துக்கொண்டா யல்லவா]

என்று தன்னூலிலும் கழறவைப்பது, முன்முறை பிறழாது ஒத்திருக்கவேண்டுமே. கைகேசியை ஏசிப் பேசும் வழக்கம் கோசலைக்கு வான்மீகத்தில் உளதாதலால் இவளுக்கு அங்குப் பொருந்தும். மற்று, இதுகாறும் கைகேசியையும் நொந்துரையாப் பெருந்தகையாட்டியாய்க் கம்பர் நூலினுள் விளங்கிய கோசலை இப்பொழுது இவ்வாறு கைத்துரைத்தல் முன்னைய குணத்தினோடு முரண்படாதோ என்னும் ஐயுறவு எய்துவித்தற் குரியதே. அத்தகையதோர் ஐயந்தான் தீருமாறே கம்பர், இவள் இராமனையும் வெறுத்துரைக்க வகுத்தனர். எல்லாவற்றிலுந் தலையன்பு இவள் தன் நாயகன்பால் கொண்ட அன்பு. அந்நாயகனுக்குத் தீங்கிழைத்தார் யாவரே ஆயினும், அவள் ஆற்றமாட்டாள். 'என்நாயகனைக் கொன்றாயே' என்று இராமனை வைதது போன்றதேயாகும் இக்கைகேசியை வைத மொழிகளும். தயரதன் முன் கைகேசியைக் கடிந்து பேசியபோது, அது அவனுக்குக் குறைவென்று மதித்த இப்பெருந்தேவி, "உரவோய், விள்ளாநிலை சேரன்பால் மகன்மேல் மெலிவின் உலகங் கொள்ளாதன்றே" என்று தெருட்டியதற்கிணங்கத் தானும் ஒழுகினள். ஆயினும் இப்பொழுது அரசனது உயிரிற்கே ஊறு நேர்ந்ததாதலின் அதற்குக் காரணமாகிய இராமனையும் கைகேசியையும் ஒருங்கே நிந்திப்பது அவளது உயர்வினை ஓங்கவைக்கின்றதேயல்லது குறைக்கவில்லை. இதன்முன் இவள் கைகேசியை நிந்தித்திருப்பாளாயின் அது, தன் மகனுக்கும் அதனால் தனக்கும் இழைத்த தீங்கிற்கு வெகுண்டுரைக்கின்ற நோக்கமுடையதாகும். அந்நோக்கம் வான்மீகத்தில் வெளிப்படையாய்க் கூறப்பட்டுமிருக்கின்றது. இப்பொழுதோ தனக்குச் செய்தாள் ஒரு தீங்கென்று வைவதாகாது; வெகுளியுமில்லை. "மன்னனுயிரை யுன் மந்திரத்தால் முடித்தாயே" என்று நொந்து இரங்குகின்றாள். இந்நிலையில் கைகேசியின் செயல் கைப்புடைய சில மொழிகளால் குறிக்கலாயது குலக்கோசலையின் கற்பினது மாண்பிற்கு உதவுமேயன்றி அவளது மனத்தின் மேன்மைக்குங் குறை வொருபோதும் இழைத்திடாது. இதுவே கம்பருடைய கொள்கை ஆதல் வேண்டுமெனும் அநுமானம் உறுதியடையும்படி வேறோர் சான்றுளது. கற்பினோடு மற்றக் குணங்களின் தூய்மையில் கோசலைக் கெள்ளளவும் குறையாதவள் மண்டோதரி. எய்திய நிலையிலும் இருவரும் ஒக்கின்றார். சக்களத்தி செய்கையால் மைந்தனையும் கணவனையும் கோசலை இழந்தவாறே மண்டோதரி நாத்தியின் செய்கையால் இழந்தவளாயினள். மாய்ந்துகிடந்த இந்திரசித்தைக்கண்டு அவள் புலம்பியபோது, சூர்ப்பணகையையேனும் அவள் சொற்கேட்டுழன்ற இராவணனையேனும் பழித்திழிக்கும் மொழியொன்றேனும் இயம்பினாலலள்; பின் மாண்டுகிடந்த இராவணனைத் தழுவி அழுகையிற்றான், அவ்விழவிற்குக் காரணமாயிருந்தவைகளில் சூர்ப்பணகையின் மூக்குமொன்று என்று குறித்தவகையில் அவளைச் சிறிது வெறுக்கின்ற மனநிலை தோன்றியது. பெண்மையின் பெருந்தகைமையோடு நல்லார் குணங்களைக் கற்பிற்கிணங்க அரசியர் முதல் அரக்கியர் ஈறாக எவ்விடத்தும் போற்றிக்காக்க வல்லவர் கலைக்கண்கள் திறந்துநோக்கும் கம்பர்பிரான். வான்மீகரது வாசகத்தைத் தழுவி எழுதும்போதும், அங்குக்கோசலை இராமனது செலவைக்குறித்த சொற்களை இங்கு நம் கம்பர் கழித்துவிட்டது மிகவும் ஆழ்ந்து கருதற்பாலது.

கைகேயியோ யாதும் எதிரியம்பினாளல்லள். அவள் அங்குத்தான் இருந்தனளோ இல்லையோ என்னும் ஐயம் கம்பர் நூலினுள் விளைகின்றது. கைகேசியும் புலம்பினாள் என வான்மீகர் கூறுகின்றார். கம்பரோ, கோசலை அழுதரற்றச் சுமித்திரை உயிர் சோர்ந்தாள் என்பாரே யன்றிக் கைகேயியைப்பற்றி ஒன்றும் இயம்பவில்லை. இமையவர் மாயத்தால் கைகேயியின் உள்ளந் திரிந்தது மல்லாமல் உறைந்தும் போயிற்றோ. "வடித்தாழ் கூந்தல் கேகயன் மாதே" எனக் கோசலை அழைப்பதை நோக்குங்கால், கைகேயி எதிரிருந்தனள்போல் தோன்றுகின்றது. இருந்தும் அவள் தன்னால் விளைந்ததன் முடிவைக்கண்டு திகைத்து அழுதரற்றுதற்கும் ஆற்றாதவளாயினளோ, மற்று மன்னனுடல்மேல் விழுந்து புலம்பியிருப்பினும், "இழைக்கின்ற இடையூறெல்லாம் இழைத்துவிட்டு இக்கயத்தி அழுதாலென், அழாதொழிந்தாலென்" எனக் கம்பர் அவள் செய்தியைக் குறிக்கொள்ளாது புறக்கணித்தாரோ அறிகிலேம்.



இதற்கிடையில் தயரதன் தேவியர் ஏனையோரெல்லோரும் மயிலின்குழாத்தில் அங்கு வந்தெய்தி,

துஞ்சி னானைத் தம்முயிரின்
துணையைக் கண்டார் துணுக்கத்தால்
நஞ்சு நுகர்ந்தா ரெனவுடலம்
நடுங்கா நின்றா ரென்றாலும்
அஞ்சி யழுங்கி விழுந்திலரால்
அன்பிற் றறுகண் பிறிதுண்டோ
வஞ்ச மில்லா மனத்தானை
வானிற் றொடர்வான் மனம்வலித்தார்

[இறந்துகிடந்த தம்முயிர் நாயகனைக்கண்டு, திடுக்கிட்டு நஞ்சுண்டவர்போல் உடல்நடுங்கி நின்றார்களாலும், அச்சமும் துயரமுமிகுந்து உணர்வழிந்து விழுந்திலர். ஏனெனில், அன்பைப்போல் அஞ்சாமையுடையது வேறொன்றுண்டோ. வஞ்சனையற்ற மனமுடைய தம் நாயகனை விண்ணுலகின் உடனே தொடர்ந்தடைய மனஉறுதி செய்துகொண்டார்]

மூவுலகத்திலும் இவர்களுக்கு நிகரான கற்புடையர் யாருளர் எனப் புகழ்ந்து கம்பர் கோசலையையுமே நிழலில் ஒதுக்கிவிடுகின்றார். உடன்கட்டையேறத் துணிந்த இவ்வுத்தமியர் தயரதன்மீது விழுந்திருக்குந் தன்மையை,

கைத்த சொல்லா லுயிரிழந்தும்
புதல்வற் பிரிந்துங் கடையோட
மெய்த்த வேந்தன் திருவுடம்பைப்
பிரியா தழுது விட்டிலரால்
பித்த மயக்காஞ் சுறவெறியும்
பிறவிப் பெரிய கடல்கடக்க
உய்த்து மீண்ட நாவாயில்
தாமும் போவா ரொக்கின்றார்.

[கைகேசியின் கசப்பான சொற்களால் மகனைப்பிரிந்தும் உயிரிழந்தும் கடைசிவரையிலும் மெய்யேபற்றிய அரசனது திருவுடம்பை அழுதவண்ணமாய் விட்டுப்பிரியாது இருந்த இம்மாதர், ஆசாபாசங்களென்னும் பித்தமயக்கமாகிய சுறா மீன்கள் மோதித் திரியும் பிறப்பாகின்ற பெரிய கடலைச் செவ்வனே கடக்கும்படி செலுத்திமீண்ட மரக்கலத்தில் தாமும் போவதற்கு இருப்பவரைப் போல்கின்றனர்]

என வகுத்துரைக்கின்றனர் கம்பர்பிரான். உயிர்தான் உய்ந்து கரையேற உதவியாயிருப்பதே மாநுடவுடல்; அஃதின்றி அது தன்னை ஆசையெனுஞ் சுறவிற்கு இரையாக்கிக்கொள்ளுமெனின், "புலையாம் பிறவி பிறந்தென் செய்தோம்" என்று ஏங்கவேண்டாவோ. இத் தொழிலை நனியாற்றியது தயரதனுக்கு அவனுடல். உயிரோடிருந்த தயரதனைக் கம்பர் புகழ்ந்தது ஒருகோடி யாக, அவ்வுயிர் நீங்கியபின் அவன் உடலம் கம்பர்வாயால் பெறுகின்ற புகழ் பலகோடி. மாண்டவனும் தயரதன், அவனைப் போற்றுவோரும் கம்பர்—இப்பாட்டொன்றே கலையுணர்வுடையோர் உள்ளத்தை உண்மைநெறியில் உருக்கிவார்க்கப்பற்றுமே.

இன்னபடி தங்கள் நாயகனைவிட்டுப் பிரிந்திருக்கத் தரியாத கற்பினாலே அவனைத் தொடர்ந்தடைய வேண்டிநிற்கின்றார், ஒவ்வொருத்திக்கும் ஆயிரங்கோசலையுங் கேளாகா இம்மாதர். இவர்களையே வான்மீகத் தகவயின் நோக்குங்கால் அங்கு அவர்,

"ஆ! மகாராஜாவே, அன்பாகப் பேசுபவரும் சத்திய சந்தருமான இராமரால் கைவிடப்பட்ட எங்களைத் தாங்கள் என் கைவிடுகிறீர்கள். இராமனைவிட்டுப் பிரிந்தநாங்கள், கணவனைக்கொன்ற கெட்ட நடக்கையுள்ள கைகேயியிடம் கைம்பெண்களாக எவ்வாறு வசிப்போம்?...... தங்களையும் வீரனை இராமனையும் பிரிந்ததால் தோன்றிய துயரத்தால் கலக்கமுற்றவர்களும் கைகேயியால் அவமதிக்கப்பட்டவருமான நாங்கள் எவ்வண்ணம் பிழைத்திருப்போம்! எவள் அரசரையும் மிக்க பலமுள்ள இராம லட்சுமணர்களையும் சீதையையும் பிரியச்செய்தாளோ, அவள் வேறு யாரைத்தான் அடித்துத் துரத்த மாட்டாள்.

என்று கதறுவதன் உட்கருத்தை ஆராய்வோமெனின் இராமனேனும் தயரதனேனுந் தம்மைக் காப்பதற்கில்லா நிலையில் கைம்பெண்களாய்க் கைகேசியின் கொடுமையின்கீழ் வாழ்வதற்கஞ்சிய அச்சமே வெளியாகின்றதன்றித் தம் நாயகன்பால் உள்ளன்பு இருந்த கொள்கை எள்ளளவேனும் தென்படல் யாதானுமில்லை. பட்டதெல்லாம் பொன்னாகும் இரசவாதம் கம்பர் நாவிலே நனியுளது.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்
கவனிக்க "சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு ஏமாறுதீர்
குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலகதைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்




டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

யுனைடெட் ஸோல் ஏஜண்டு: கன்ஸர்ன், மதுராஸ்.

டிப்போ: பம்பாய். கல்கத்தா.
"நஞ்சன்கூடுபல்பொடி"
சாதாரணம்-பாக்கெட்
பிரான்சு: மதுரை. காஞ்சீபுரம்.

தோலாமொழித்தேவர் இயற்றிய

# சூளாமணி

[656-வதுபக்கத் தொடர்ச்சி]

5. மந்திரசாலைச் சருக்கம்.

337. மையில் வானுல காண்டுமண் ணோர்களுக்
குய்யும் வாயி லுணர்த்திய தோன்றிய
ஐய னாற்பிற வாரஞர் நீங்கியிவ்
வைய மாயதெல் லாம்வளர் கின்றதே. 101.

மை இல் வான் உலகு ஆண்டு - குற்றமற்ற தேவலோகத்தை முன்பு ஆண்டிருந்து, (பின்பு) மண் உள்ளோர்களுக்கு உய்யும் வாயில் உணர்த்திய தோன்றிய- இப் பூமியில் வாழும் மக்களுக்கு அவர்கள் உஜ்ஜீவிக்கும் மார்க்கத்தை உபதேசித்தருளுமாறு இங்கே பிறந்த, ஐயனால்-அந்த விச்சுவனால், இவையம் ஆயது எல்லாம் - இம்மண்ணுலகமெல்லாம், பிற ஆர் அஞர்நீங்கி வளர்கின்றது - நீக்கற்கரிய பிற துன்பங்களெல்லாம் நீங்கி இனிது வளர்கின்றது.

---

338. மங்குல் வானுல காண்டு வரத்தினால்
இங்கு வந்தனன் ஈண்டளி யீந்தபின்
திங்கள் வாளொளி யிற்றிகழ் சோதியாய்த்
தங்கு வானுல கிற்றகை சான்றதே. 102.

மங்குல் வான் உலகு - மேகஞ்சூழ்ந்த வானுலகத்தை, ஆண்டு - அரசாண்டிருந்து, வரத்தினால் - கடவுள் தந்த வரத்தினால், இங்கு வந்தனன் - இவ்வுலகத்தில் ஒரு வித்தியாதரனாகப்பிறந்தான், ஈண்டு அளி ஈந்தபின் - இங்கே அரசனாகத்தங்கிக் குடிகளுக்குத் தண்ணளி புரிந்தபின், திங்கள் வாள் ஒளியின் - சந்திரனுடைய நிறைந்த ஒளியைப்போல, திகிழ் சோதியாய் - விளங்கும் ஒளிவடிவமாய், தங்கு வான் உலகில்-உறையும் விண்ணுலகத்தில், தகை சான்றது - பெருமை கூர்ந்து விளங்குவான்.

வாள் - ஒளி; வாளொளி - மீமிசைச்சொல். 'வந்தனன்,' என்பதற்கு அவன் என்ற எழுவாய் வருவித்துரைக்க. அவன் சோதி வடிவானமைபற்றிச் சான்றதே என்று அஃறிணை முடிபாற் கூறினர்.

---

339. தன்னி னாய்விளை வித்திரு ளைத்தவிர்த்
தின்ன னாகவென் றெண்ணிய வெண்ணமோ
டன்ன னாதலி னாலவன் மேற்பிறர்
என்ன ரேனுமின் னாதன செய்கலார். 103.

தன்னின் ஆய் - தனது சுயேச்சையால் இவ்வாறு தோன்றி, விளைவித்து - நன்மையை விளைவித்து, இருளை தவிர்த்து - தீமையை நீக்கி, இன்னன் ஆக என்று - அரசனாய் வாழ்வதென்று, எண்ணிய எண்ணமோடு - நினைத்த நினைப்பினால், அன்னன் ஆதலினால் - அவன் இவ்வாறு தோன்றியிருப்பதால், அவன் மேல் - அவனுக்கு, என்னர் ஏனும் - எப்படிப்பட்டவரும், இன்னாதன எண்ணிலார் - தீங்கு செய்ய நினையார்.

---

340. காம்பின் வாய்ந்தமென் றோளியக் காதலன்
தேம்பன் மாலைநன் மார்பகஞ் சேருமேல்
ஆம்பன் மாலையும் ஆய்கதிர்த் திங்களும்
தாம்பன் மாலையுஞ் சார்ந்த தனைத்தரோ. 104.

காம்பின் வாய்ந்தமென் தோளி - மூங்கிலைப்போல் அழகுவாய்ந்த மென்மையான தோள்களையுடைய நமது சுயம்பிரபை, அ காதலன் - அத்தகைய கணவனுடைய, தேன் பன் மாலை நன் மார்பகம் சேருமேல்- வண்டுகள்பாடும் மலர்மாலையை அணிந்த அழகிய மார்பைத் தழுவிக் கூடப்பெறுவாளாயின், ஆம்பல் மாலையும் - செவ்வல்லி மலர்க்கூட்டமும், ஆய் கதிர் திங்களும் தாம்-அழகிய கிரணங்களை உடைய சந்திரனும், பல் மாலையும் - பலநாளும் மாலைப்பொழுதில், சார்ந்தது அனைத்து அரோ - சேர்ந்து விளங்குவதைப்போலச் சிறந்து விளங்குவார்கள்.

மாலை - (1) பூமாலை(2)வரிசை, கூட்டம் (3)மாலைப்பொழுது, 'தீம்பன்மாலை' என்றும் பாடம்.

---

341. நம்பி தங்கை நகைமலர்க் கற்பகக்
கொம்பி னன்னவள் கொங்கணி கூந்தலாள்
அம்பி னீண்டரி சிந்திய மாக்கயல்
வம்பி னீண்டமை வாணெடுங் கண்ணினள்

342. கோதின் மாலைகண் மேற்குதி கொண்டெழு
கீத மாலைய கின்னர வண்டினம்
ஊதி மாலைய வாயுறை யுங்குழற்
சோதி மாலையென் பாள்சுடர்ப் பூணினள்

343. வெம்பு மால்களி யானைவி லக்குநீர்
நம்பி ஞாயிறு சேர்பெய ராற்கணி
அம்பி னீளரி வாணெடுங் கண்ணவள்
வம்பு சேர்முலை வாரிவ ளாகமே. 105—107.

நம்பி தங்கை - உனது மகளாகிய, நகைமலர் கற்பகம் கொம்பின் அன்னவள் - விரிந்தமலர்களையுடைய கற்பகமரக் கொம்பை ஒத்தவளும், கொங்கு அணி கூந்தலாள் - வாசனையோடு கூடிய அழகிய கூந்தலை உடையவளும், அம்பின் நீண்டு-அம்பைப்போல்நீண்டு, அரி சிந்திய - செவ்வரிகள் பரந்த, மா கயல் வம்பின்- சிறந்த கயல்மீனைப்போலும் புதுமையின், நீண்ட - சிறந்த, மைவாள் நெடும் கண்ணினள் - மைதீட்டிய ஒளிபொருந்திய (வாளைப்போன்ற) நீண்ட கண்களை உடையவளும், கோது இல்-குற்றமற்ற, மாலைகள்மேல்- மாலைகளின் மீது, குதி கொண்டு எழு - குதித்துஎழுகின்ற, கீத மாலைய கின்னரம் வண்டு இனம் - இசைப்பண்ணின் தொகுதி வாய்ந்த கின்னரம் போன்ற வண்டுக்கூட்டம், மாலைவாய்-அந்திப் பொழுதில், ஊதி உறையும் - தேனையுண்டு தங்கும், குழல் - கூந்தலையுடையவளும், சுடர் பூணினள் - பிரகாசிக்கும் ஆபரணங்களை அணிந்தவளும் ஆகிய, சோதிமாலை என்பாள்-சுயம்பிரபை, வெம்புமால்களிறு-சினங்கொண்ட மத யானையையும், விலக்கு நீர் - வென்று அடக்குந் தன்மையனான, நம்பி- ஆண்மக்களிற் சிறந்த, ஞாயிறு சேர் பெயரானுக்கு - அருக்ககீர்த்தி என்னும் பெயரை உடைய இவனுக்கு, அணி - ஆபரணமாக விளங்குவாள்; அம்பின் நீள் அரி வாள் நெடும் கண் அவள்- அம்பைப்போல நீண்ட செவ்வரிபரந்த நீண்ட கண்களையுடைய இவளுடைய, வம்பு சேர்முலை - கச்சையணிந்த முலையே, வாரி வளாகம் - அவனுக்குக் கடல் சூழ்ந்த உலகம்போலும்.

சுயம்பிரபையை அருக்ககீர்த்தி என்பவனுக்கு மணம்செய்து கொடுத்தால், அவள் அவனுக்குச் சிறந்த அணிபோல விளங்க அவளுடைய முலையைத் தழுவிக் கூடும் இன்பத்தை அவன் இவ்வுலக முழுவதையும் பெற்றாற்போல மதிப்பான் என்பதாம்.

---

344. இன்ன வாறிசை யப்பெறின் யாவரும்
என்ன வாறும் இகப்பவ ரின்மையால்
அன்ன வாறரு ளுண்டெனி லாய்ந்தியான்
சொன்ன வாறுகொண் டீசுடர் வேலினாய். 108.

சுடர்வேலினாய்-ஒளிரும் வேலையேந்திய மன்னனே, இன்னவாறு இசையப்பெறின் - இவ்வாறு இவர்கள் கணவனும் மனைவியுமாய்ப் பொருந்தப் பெறுவாராயின், யாவரும் என்னவாறும் இகப்பவர் இன்மையால் - எவரும் எவ்வகையிலும் பழிப்பவர் இன்மையால், அன்னவாறு அருள் உண்டு எனின்-இப்படிச் செய்வது உனக்கும் சம்மதமானால், யான் சொன்னவாறு கொண்டு - நான் சொன்ன விஷயங்களை ஆலோசித்து அங்கீகரித்து, ஈ-மகளை மணம் புரிந்து கொடு; (என்றான்.)

கொண்டீ - கொள்வாயாக; ஈ என்னுந் துணை வினையைக்கொண்ட 'கொள்' என்னும் வியங்கோள் வினை முற்றுமாம்.

---

வேறு

345. கொங்குவண் டளைந்த தாரான்
குறிப்பறிந் திவைக ளெல்லாம்
அங்கவன் மொழிந்த பின்னை
அவனையு மமைதி கூறி
நங்கைதன் றாதை தோழர்
நால்வரு ணால்வ ராவான்
தொங்கலந் துணர்கொண் மார்பிற்
சுமந்தரி சொல்ல லுற்றான். 109.

வண்டு கொங்கு அளைந்த தாரான் - வண்டுகள் பூந்தாதை அளையும் மாலையை அணிந்த மன்னனுடைய, குறிப்பு அறிந்து - உள்ளக்கருத்தை உணர்ந்து,அங்கு அவன் - சுதசாகரன், இவைகள் எல்லாம் மொழிந்த பின்-இவற்றைச் சொல்லி முடித்தபின்பு, அவனையும் அமைதிகூறி - அவனையும் இருவென்று சொல்லி, நங்கைதன் தாதை தோழர் - சுயம்பிரபையின் தந்தையின் தோழராகிய மந்திரிமார், நால்வருள் நால்வரான- நான்குபேர்களில் நான்காவதாகிய, தொங்கல் அம் துணர்கொள் மார்பின் சுமந்தரி - மாலையாகத் தொடுக்கப்பட்ட அழகிய பூங்கொத்துக்களைக் கொண்ட மார்பினை உடைய சுமந்தரி யென்பவன், சொல்லல் உற்றான் - தன் அபிப்பிராயத்தைச் சொல்லத் தொடங்கினான்.

# மலர்வனம்.

## விதியில்லா மதிபாலன்.

வீமனே காம னாற்போல் வீரமுடன் பேரழகும் வாய்ந்த இளையோன் மதிபாலன், துயில்மறந்த கண்ணும் மலர்மறந்த குழலுமாய் நெடிதுநாள் தாங்கிய தனிப்பெருந்துயரின் பாரத்தால் குனிந்திருந்த மனோவதியின் முகத்தினைத் தன் கரங்களால் மெல்லென மெல்லென நிமிர்த்தி, "அன்னாய், உன் தொல் துயர் என்றுமுளது ;...மற்று, இன்று யான் எய்திய வெற்றியைக் கேட்டி; கற்பதற்குரியயாவையும் கற்றெனென் என என் வில்லாசிரியன் விடைகொண்ட இவ்விருதிங்களாய் எனதாற்றலைச் சோதிக்கக் காத்திருந்தேன் ; இன்றைக்கு நம்நகர் மல்லர்தலைவனை வேந்தன் முன் வென்று காட்டினேன். மன்னவன் பரிசில் தந்த இந்தப் பொன்மாலையைக் காண்டி. இதன் முன் வலிய வீரர் ஆயிரம்பேரை அழித்தவனும் அம்மா அம்மலன்," என ஆர்வமுடன் தன் கன்னிப்போர்ப் பொன் மாலையைத் துவண்டிருந்த அவள் கையினுள்வைத்துப் பொத்துமளவில், உருளுந் தாளங்கள் அவள் கண்ணின் றுருக்கக்கண்டு, " அன்னாய் ஆமேல், உன்னருந்துயரை இனி என்பெரும்புகழால் போக்குவேன்" என மைந்தன் இயம்புதலும், உடைந்தநெஞ்சினின்று உற்றெழுந்த ஊதைக்கிடையே அம்மாதராள், " மகனே, நின்னை இந்நாள் தன் னகம் புதையப் புல்லி மகிழ்தற்கோ நின்தந்தை இல்லாதானாயினன்; தனியே நின்று யான் இது கேளாமுன்னம் மாய்ந்தேனல்லேன், பாவியேன் " என மறுகலுற்றாள். வேறு வே[illegible]ருப்பினும் கண்களெல்லாம் ஓரினத்தன வாதலின் எதிர்நின்ற மதிபாலனுங்கலுழ்ந்து, "யாவனோ எந்தை அன்னாய், எங்குளன் இயம்பாய் கொல்லோ, ஆவியோ டிருப்பானாயின் அடைவதோ அருமை யன்று. பாவியென் றன்னை வீணே பழிப்பதன் பயனென் கூறு ; சாவையும் எந்தைக் காகத் தாங்கியான் நிற்பே னன்றோ" என்று உண்மையை உரைக்குமாறு இரந்தனன். மனோவதியின் இதயம் துண்ணெனத் துடித்தது; முத்தென உதிர்ந்த கண்ணீர் மாலையாய்ச் சொரிய, இருளில் தைத்தது முள்ளோ வெவ்வரவின் பல்லோவெனத் தெரியாநிலையில் தவிக்கு மொருவன் போல் தடுமாறி, "வாழி, மைந்த, வேண்டா, வாழி வாழி," என விம்மினாள். அன்ன அன்னையின் கரங்களை அன்புடன் பற்றி, "இரபதோடு ஈரிரண்டு ஆண்டுகள் நிரம்பியும் என்னை ஈன்றவன் யாவனென இன்னும் இயம்பினையலை. இஃதுனக் கழகன்று. ஆயினும், உரைப்பதா லுனக்கோர் குறை உண்டாமெனின் விடுக," எனச் சாற்றுமுன், அவ்விடலையை விளர்த்த முகம் பனிப்ப நோக்கி, "உருத்திரசூரனே யடா மைந்தா உன் தந்தை" என்றவுடன் மதிபாலன், நினைவென்றும் மற்றுக் கனவினுட் கண்டதோர் கனவோ வென்றும் ஒருவ்வகையற்றுத் திகைத்தானாயினும் அவனது உடலம் உயரத்திலும் பருமனிலும் இருமடங்கு வளர்ந்தது. வளர்ந்தும் உவகையால் தாவுகின்ற அவனது [illegible]ங்குதற்கு இடம் போதவில்லை. "அன்[illegible]னாய், என் [illegible]ய்! என் செவியோ, உன் நாவோ

188932
சென்னை 600 008

பொய்த்தன? தோலாத தொல்வீரன் உருத்திர சூரனேயோ எனதையன்! அத்தறுகணாண்மைக்கு ஒரு தனிப் புதல்வனோ யான்? பரிமாப்படைஞர் இருநூற்றுவரை ஒன்றியாய் நின்றுவென்ற வீரன்! படைத்தொழிலின் எல்லையை, போர்ப்புகழின் மகுடத்தை, தன் துணைக் கூற்றுவன் பின்தொடரப் பகைச்சேனைக்குள் முன்பாயும் சிம்மத்தை......அன்னாய் என்னை நீபெற்றது முன்னரேயாயினும் யானோ இன்றே பிறந்தவனாயினேன். இது சொல்; மணந்தவுடன் உன்னையவன் விட்டேகியது ஏனம்மா. நின்பிழையன்றென்பதுறுதி. மகதநாட்டுச் சேனாபதியாய் அவன் ஒருகாலத்தில் இருந்தானென்றியம்புவார்; மற்று நாமேன் இவ் வங்க நாட்டில் வசிக்கின்றோம்? யானொருவன் உளனென்றறிவானோ அவன். இந்நாலைந் தாண்டுகளாக அவன் பெயரேனும் செயலேனும் புறம்போந் துலவகில்லதே. இந்நாள் யாண்டுளன் அறிதியோ! எல்லாம் எனக்குரைத்து அவனிருக்குந் திசைநோக்கி என்னை இன்றே போக்குதி. அவன் திருமுகந் தரிசித்து, கழல் பணிந்து, அவனிருபெருகரங்களாலுந் தழுவப்பெற்று, அவன் கொற்றக்கொடியின் கீழ் உடன்நின்று எனது போராற்றலைக் காட்டுதலின்றிக் கணமொன்றேனும் இனி இங்குத் தாழ்வேனேல், தந்தையைச் செற்ற பாவத்தில் யான் சேர்க," எனச் சாற்றினான். மருண்டனளேனும் இனி மறைக்கும் வகையிலையென உணர்ந்தனள் மனோவதி; "அஞ்சினேன், மகனே, இதற்கே அஞ்சி இதுகாறுமியம்ப யான் துணியாதிருந்தனென். கோமானை இழந்த யான் நின்னையும் பிரிந்தபின், குலமைந்த, எதுகொண்டு வாழவல்லேன். இருபத்தைந் தாண்டுகளுக்குமுன், என்னரு மதலாய், இருபத்தைந்தாண்டுகளுக்குமுன், மகதர்கோன்படைத்தலைவனாகிய உன்தந்தை இங்குவந்தென்னை மணங்கொண்டு தன்னகர் மீண்ட மூன்று திங்களகவயின், மதியாது தன்னை யாதோ பகர்ந்தனன் தன்வேந்தன் எனமனம்வெறுத்து, கருக்கொண்ட என்னையுங் கருதாது, அத் தேயம்விட்டுப் போயினான். தனியிருந்தஎன்னை என்தந்தை இங்கு அழைத்துக்கொள்ள, நீ பிறந்தஇரண்டாண்டுகளுக்குள் யான் தந்தையும் அற்றவளாயினேன். என் தந்தையின்பால் அன்புடைய இவ் வங்கர்கோமான் உன்னைத் தன்புதல்வனினும் அன்றுமுதல் இனிது வளர்த்து வருவதையறிவாய். தன் காவலன்பால் உற்றவெறுப்பு உன் தந்தைக்கோர்போர் வெறியாய் மாறி, இகல்நடக்குமிடமெல்லாம் நாடிச் சென்று தன்னைவேண்டுவோர்க்கெல்லாம் தனதாற்றலை விற்று வாழ்ந்திருந்தனன். வெற்றித் திருவைப்பற்றிக்கொண்டு அளியேனை அறவே துறந்தானடா மைந்தா. மீண்டிலன். அவனது பெருகும் புகழைக் கேட்பதற்கே வாழ்ந்திருந்தேன். சிலகாலமாக அவன் பேரும் கேட்கவில்லை; இருக்குமிடமுந் தெரியவில்லை; ஈதல்லால் யானறிந்த தினி யாதுமிலது" என முடித்தனள். இதுகேட்ட இளவல், "அம்ம, எவ்வயின் இருப்பினும் என் தந்தையை அடைந்து உன் நாயகனைக்கொணர்வேன்......நம் வேந்தன் ஏனிதன்முன் உன்பொருட்டு உருத்திரசூரனைத் தேடிக்கொணர்விக்க மறுத்துவிட்டனன்" என வினவ, அவள், "மைந்த அவன் மறுத்திலன். துறந்து சென்ற நாயகனைக் கொணர்ந்து தா, எனக்கேட்க நாணினளாய்யான் வாளாவிருந்துவிட்டேன். தானே அது செய்யற்குரியது என்றவன் எண்ணாதது என்விதியல்லால் வேறு யாது. சிறுவ, உன்னைப் பிரியத் தரியேனாயினும், நின்னை உந்தும் இவ்வூக்கத்தைத் தடுக்கும் வன்மை எனக்கில்லை. மற்றென் மணமகனை மீண்டுங் காணலாகு மென்னுமோர் நசையும் உளது. என்செல்வ, செல்க நீ. நம்மன்னவன் நின்வயின் மிக்க பரிவுளன். அன்னான் உதவியை வேண்டிக்கொள். உற்றமுறையில் உன் கருமத்திற்குத் துணைசெய்வான்" என விடைதந்து பின்னும் யாதோ பகர நினைத்தவள்போல் நிற்றலும், மைந்தன், "நின் ஆசி தந்திடுக, இன்றே நிருபன்பால் சென்று உதவி வேண்டுவல்" என மொழிந்தனன். மனோவதி, "குமர, என் ஆசியோடு நினக்குக் கொடுத்தற் கோர் குறியுமுளது" என இயம்பி, பொற்றொடி யொன்று கொணர்ந்து, இதனை அணிந்துகொள். இதன்மீது உன் கொற்றத் தந்தையின் இலச்சினை பொறிக்கப் பெற்றிருக்கின்றது. பிறப்பது ஆண்மகவாயின் இப்பொற்றொடியை இட்டு...இப்பொற்றொடியை இடுக" என்று உன் தந்தை பணித் தகன்றனன்;" எனப் பரிவினோடும் அவனது கரங்களில் சூட்டினாள். தந்தை ஈந்த தொடி கையிலும் மன்னவன் அளித்தமாலை மார்பிலும் அணிந்து மழவிடையனைய மதிபாலன் கொற்றவன் கோயில்நோக்கிப் புறப்பட்டான். சிறுவன் சிந்தனை அலையாதிருந்திருக்குமாயின், அவன் நற்றாய் இட்டு என்ற எச்சத்தைச்சிறிது கவற்சியுடன் விரைந்து முற்றுக்கியதைக் கருத்துட் கொண்டிருப்பான்.

"சில ஆண்டுகள் கழிந்தபின் யானோர் ஏவலாளனை உன்வயின் விடுப்பேன். நின்வயிற்றுதித்த மகவு புதல்வனாயின் இப்பொற்றொடியைப் பூட்டி அப்புதல்வனை அவனோடு அனுப்புக" என்று உருத்திரசூரன் தன் மனைவிக்கு விதித்திருந்ததையும், அவ்வாறே பன்னிரு வருடங்களுக்குமுன் ஏவலாளன் வந்ததையும், மகனைப் பிரியலாற்றா மனோவதி தனக்குப் பெண்ணே பிறந்ததென்று ஏவலாளன்பால் சொல்லிப் போக்கியதையும் இன்று தன் மைந்தனுக்கு இயம்பத்துணியாமையால் அவள் மொழி அவ்வண்ணம் பிறழலாயிற்று.




ASOKA SALT

அசோகா சால்ட்.

(ரிஜிஸ்டர்ட்.)

(அசோகா—உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வாராமல் தடுப்பதற்கும் அசோக—உப்பு ஓர் அரு மருந்து.

உணவை நன்றாகச் சீரணஞ் செய்து, யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும் மலத்தைக் கழிக்கும் சிறந்த குணமுள்ளது.

அசோகா—உப்பு ஜலத்தில் போட்டால் பால் பொங்குவதுபோலவே பொங்கி வரும்.

விலை ரூ. 1—8—0. தபால் செலவு வேறு.

அசோக கம்பெனி லிமிடெட்,

சென்னை.



ஏற்படுத்தியது] நாஷனல் [1906.

இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ், 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

இந்தியர்களால் நடத்தப்படும் கம்பனிகளில் தலையாயது

1930 வருஷாந்திர ரிபோர்டின் சுருக்கம்.

| | |
|---|---|
| 1930 வருடம் நிறைவேறிய புது பிஸினெஸ் | ரூ. 1,13,55,069. |
| 1930 வருடத்தில் அதிகமான லைப் அஸ்யூரன்ஸ் பண்டு | 11,51,813. |
| பிரீமியம் வரும்படி | 30,83,936. |
| 1930 வருடத்தில் கிடைத்த வட்டி வரும்படி | 7,47,608. |

மொத்த அஸ்ஸெட், ரூ. 1,65,00,000க்கு அதிகம்

1930 வருடத்தில் நடை முதலிலிருக்கும் லைப் அஸ்யூரன்ஸின் மொத்தம் 6,55,70,916.

பிரீமியம் மிகக்குறைவு, பாலிஸி நிபந்தனைகள் மிகவும் தாராளமானவை. எல்லாவித லைப் அஸ்யூரன்ஸ்களும் எடுத்துக் கொள்ளப்படும்.

ஏஜென்ஸி எடுத்துக்கொள்வது உங்களுக்குஇலாபமாகும்

113, அரமனைக்காரன் தெரு, சென்னை. } T. அனந்தாசாரி, B. A. செக்ரடரி, மதராஸ் பிராஞ்ச்.

R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

நாஷனல் பையர் அண்டு ஜனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்., 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

தீ, மோட்டார்கார் மோட்டார் ஸைகில் இன்ஷூரன்ஸ்.

கேட்போருக்கு விவரங்கள் அனுப்பப்படும்.



:: உத்தம தோழன் ::

அறியாமையினால் ஆபத்தில் அகப்பட்டு அல்லல்படும் காலத்தில் உங்கள் இடுக்கண்களைப் போக்கி இராஜவழியென்னும் ஆரோக்கிய சம்பத்தில் வைப்பது எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்தான்

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1. விவரம் வேண்டுவோர் எங்கள்

காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தை வரவழைத்து வாசியுங்கள். இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26, பிராட்வே, மதராஸ்.



— திருக்குறள் —

மூலமும் சொற்றுறிப் பகராதியும்

விஷய ஒப்புக்குறளும்

(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துள்ளது. மாணாக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணா 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.



- பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

மூன்றாவது ஆண்டு நடக்கின்றது.

| | |
|---|---|
| உள் நாடு வருட சந்தா | ரூ. 2 0 0 |
| வெளி நாடு " | ரூ. 2 8 0 |

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணா 5. வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசீய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. நாராயணசாமி.

விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.



சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

திரு அருட்பா

வசனப்பகுதி

ஆ. பாலகிருஷ்ணபிள்ளை பி. ஏ. எம். எல்

அவர்களது அடக்க விலைப்பதிப்பு.

புஸ்தகவிலை, 4, அணாவும், புஸ்தக போஸ்ட் செலவிற்காக, 1 அணாவும், ஆக, 5 அணா தபால் ஸ்டாம்புகள் அனுப்பிப்பெற்றுக் கொள்ளலாம்.

கலாநிலயம்—புரசைபாக்கம் சென்னை.

# கலா நிலயம்

## 1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும்:— கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம்:— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. காந்தார நாட்டுக் கட்டழகி:—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
5. தமிழ்ப் பாடம்:—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
6. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
7. வானசாஸ்திரம்:—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மலர்வனம் பழமுதிர்சோலை, மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்நீஷேபன், எபிகுயூரன், ஜினோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஓயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

## 2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கம்பராமாயணம்:—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
2. அப்பர்:—கட்டுரைகள் 50
3. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
4. ஏமாங்கதத்திளவரசன்:—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது
5. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
6. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
7. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
8. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
9 நம்மாழ்வார் வைபவம்:— கட்டுரைகள் 12.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

## 3-வது வால்யூம் 1930-ஆம் ஆண்டுப் பிரதிகள்.

1. கம்பராமாயணம்:— மந்திரப்படலம், மந்தரை சூழ்ச்சிப் படலம் சட்டுரை 48.
2. குறுந்தொகை:— 400 பாட்டுகளும் உரையுடன் 34.
3. தமிழ்ப்பாடம்:—கிருஷ்ணன் தூது, நைடதம், நளன் தூதுப் படலம். இலக்கணம் புணரியல் முற்றுப்பெற்றது.
4. அப்பரும் 64 கலைகளும்:—36.
5. நம்மாழ்வார் வைபவம்:—34.
6. இலஞ்சிப்பாவை:—இதழ்கள் 24.
7. ஆச்சரிய சூடாமணி:—(ஒரு மொழிபெயர்ப்பு நாடகம்) 15.
8. மானதசாத்திரம்:—(நடத்தை) 32. மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், சிறுகதைகள், மலர்வனம், பழமுதிர்சோலை, மாதவிமாதவம் ஆகிய பல கட்டுரைகள்.

மேற்கூறிய மூன்று வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

| உள்நாடு | ரூ. | அ. | ப. | வெளிநாடு | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| பையிண்டு செய்யாதது | 8 | 8 | 0 | பையிண்டு செய்யாதது | 10 | 0 | 0 |
| காலிகோ கில்ட் | 10 | 0 | 0 | காலிகோ கில்ட் | 11 | 8 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 8 | 0 | ஆப்லெதர் கில்ட் | 12 | 0 | 0 |

:: கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::




## வர்த்தமானம்

இங்கிலாந்தில் சைவ உணவுப் பிரசார முயற்சி நடந்து வருகின்றது. பிரிட்டிஷ் பார்லிமெண்டு சபை அங்கத்தினர் மாதம் ஒரு விருந்து நடத்துகின்றனர் என்றும், அவ்விருந்தில் சைவ உணவு அளிக்கப்படுகின்றதென்றும் தெரிகின்றது.

***

கோயமுத்தூர்ஜில்லாவைச் சேர்ந்த சுண்டபாளையம் என்னும் கிராமத்திலுள் நாடார் வகுப்பினர், இனிக் கள் இறக்குவதற்குமரமேறுவதில்லையென்றும்,இனிப் பதினியில் வெல்லமே காய்ச்சுவதென்றும் முடிவு செய்திருக்கின்றனர் என்று கோயம்புத்தூர்ச் செய்தி தெரிவிக்கின்றது.

***

காந்தி அடிகளின் 62-வது பிறந்தநாள் அக்டோபர் மாதம் 2-ந் தேதி வருகின்றது. அத்தினத்தன்று கிர்கான் என்னும் ஊர்ஜனங்கள் ஒன்று சேர்ந்து 62லட்சம் கஜம் நூலை நூற்றுக் காந்திக்குப் பரிசாக அளிக்கப் போகின்றனராம்.

***

சீனாவில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தினால் 20 லட்சம் பேர் மாண்டனர் என்றும் லக்ஷக்கணக்கானவர் வீடு வாயில் இல்லாது வாடுகின்றனர் என்றும், சீன அரசாங்கத்தார் கஷ்ட நிவாரண முயற்சி செய்து வருகின்றனர் என்றும் அயல்நாட்டுச் செய்தி அறிவிக்கின்றது.

***

இதுவரையில் இங்கிலாந்தில் அதிகாரம் வகித்த தொழிற்கட்சியார், வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தங்களால் தீர்க்கமுடியாத காரணத்தை முன்னிட்டுத் தங்களது மந்திரிசபையைக் கலைத்துவிட்டனர். மாக்டொனால்ட், லிபரல் கட்சியினரின் துணைகொண்டும், கன்ஸர் வெட்டிவ் கட்சியினரில் சிலர் துணைகொண்டும் தேசீயக்கட்சி மந்திரி சபையொன்றை நிறுவியுள்ளார். இந்தியா விஷயமாயும், ரவுண்டேபில் மஹாநாடு விஷயமாயும் இதுவரை கையாளப்பெற்ற கொள்கையை இக்கட்சியார் ஏற்பரென்று சொல்லப்படுகின்றது.

***

திருக்காளத்தியில் காளத்திநாதர் ஆலயத்தில், ஞானப்பூங்கோதையம்மன் சன்னதி கர்பக்கிரஹத்தில் இருந்த பொற்கலசம் இரண்டுவாரங்களுக்குமுன் களவாடப்பெற்றதென்றும், போலீசார் திருடனைப் பிடிக்க முயன்றுவருகின்றார்கள் என்றும் தெரிகின்றது.

***

பிரான்ஸில் வரவர வரிப்பளு அதிகமாகின்றதாம். சமீபத்தில் பிரஞ்சுக்குடியரசுப் பிரஜைகள் ஒன்றுகூடி வரி அதிகமாவதைக் கண்டித்தனர் என்றும்,சில புதிய வரிகளைக் கொடுக்க மறுக்கின்றனர் என்றும், பாரிஸ் நகர சபையினர் அதிகமான செலவு செய்கின்றனர் என்று ஜனங்கள் ஆத்திரங்கொண்டு இருப்பதாகவும் அயல்நாட்டுச் செய்தி கூறுகின்றது.

பர்மாவில் மந்திரிகளின் சம்பளத்தைக் குறைக்க முயற்சி நடக்கின்றதென்றும், சீக்கிரத்தில் கூடும் சட்ட சபையில் இது விஷயமாய் விவாதம் நடக்கும் என்றும் பர்மாச் செய்தி கூறுகின்றது.

***

இங்கிலாந்து வாசியான லேடி ஜூலியா என்னு மாது, மத ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுக் கடைசியில் இந்து மதமே பெருமையுடையது என மதித்து அம் மதத்தைத் தழுவினராம். அவர் பிரைட்டன் என்னுமிடத்தில் ஒரு இந்துக்கோயில் கட்டியிருக்கின்றாராம். அக்கோயிலில் இருப்பவர் இந்து மதத்தை எங்கும் பிரசாரம் செய்யும் வேலையை உடையவர். லேடி ஜூலியா என்னும் அம்மை சிறிது காலத்திற்குமுன் இறந்துபோனார். இறக்குமுன் அவர் எழுதிவைத்த வில்லில் தாம் இறந்த பிறகு தம்மைத் தகனம்செய்து, அச்சாம்பலைக் கங்கையில் கரைக்கவேண்டுமென்று எழுதிவைத்திருந்தனராம். அவ்வாறே அவ்வம்மையார் சாம்பல் கங்கையில் போடப்பட்டதாம்.

***

லார்ட் இர்வின்பிரபுவின் கடைசிக் குமாரன் தென் இங்கிலாந்தில் ஒரு பள்ளியில் படிக்கின்றானாம். இர்வின் பிரபு காந்தியின் பேச்சின்படி நடக்கின்றாரென்று மற்றப் பிள்ளைகள் இப்பிள்ளையைக் காந்தியென்று அழைத்துக் கேலிசெய்கின்றனராம். அச்சிறுவன் தன் தந்தையிடம் சென்று இனிக் காந்தியின் பேச்சைக் கேட்கா திருக்குமாறும், இல்லையேல் பள்ளிப் பிள்ளைகளின் உபத்திரவம் தாங்கமுடியாதென்றும் கேட்டுக்கொள்ளப்போகின்றானாம்.

***

ஸெக்கோ ஸ்லேவியாவில் தாமஸ் பாட்டர்ஸ் என்ற ஒரு பணக்காரர் இருக்கின்றாராம். அவருக்கு ஒரு கோடி பவுனுக்குமேல் சொத்து இருக்கின்றதாம். அவரது செருப்புத் தொழில் சாலையில் 17000 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனராம். நாள் ஒன்றிற்கு 1385000 ஜோடி செருப்புகள் அந்தத் தொழிற்சாலையில் செய்யப்படுகின்றன. இக்கம்பெனியின் செருப்பு விற்பனைக்காக உலகமுழுதிலும் இருக்கும் கிளை ஆபீசுகளின் தொகை 2000. இவர் தமது சுய முயற்சியால் 10 வருடத்தில் இவ்வளவு பெரிய வியாபார விர்த்திபண்ணிப் பொருள்ஈட்டியுள்ளாராம். தொழிலாளர்கள் நன்மைக்கென பத்திரிகை ஒன்று இவரால் நடத்தப்படுகின்றது. அக்கம்பெனி வேலையாளர்களுக்கு அப்பத்திரிகை இலவசமாக அனுப்பப்படுகின்றதாம்.

***

மோட்டார் வண்டிகளைக் குறைந்த செலவில் வைத்துக்கொள்ளும் பொருட்டு ஐரோப்பாவில் ஒரு நூதன விறகு கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றதென்றும், ஒரு மோட்டாரோட்டி 8பென்ஸ் விலையுள்ள விறகுகொண்டு 30மைல் பிரயாணம் செய்தான் என்றும், இனி மோட்டார் சொந்தக்காரர்களுக்குப் பெட்ரோல் செலவு அதிமாகாதென்றும், இலங்கையிலிருந்து வெளியாகும் 'உதயதாரகை' என்னும் பத்திரிகையில் ஒரு செய்தி காணப்படுகின்றது.

188932

KALANILAYAM.
REG. No., M 2324.

—:வைத்திய ரத்ந:—

பண்டிட். D.கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898

“ஜீவாமிருதம்”




பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப்போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபால் பெட்டி. 287. மதருஸ்.

கேட்லாக் இனாம்

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ 18—0—0

சாமநேவன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்நாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

:: உயர்தரமாய்ச் செய்திருக்கிறார்கள் ::

அப்படித்தானென்ன ருசுப்படுத்துவது உங்கள் கடன்!




இன்றைக்கு ஒரு கட்டியாவது இரு கட்டிகளடங்கிய ஒரு பெட்டியாவது வாங்குக!

டாக்டர் ட்ராலியின்

- லயன் சோப் -

அதைப்பற்றிச் சொல்லப்படுவ தெல்லாம் உண்மையா வென்பதை நீங்களே பரீக்ஷித்துப் பாருங்கள். இது நல்ல முறையான விண்ணப்பம். பெயரை ஞாபகமாக வைத்துக்கொள்ளுங்கள்.

:. எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும் ::

சோல் ஏஜண்ட்,

அ. வீர. அ. அடைக்கப்ப செட்டியார்,
52, பந்தர் தெரு மதராஸ்.

முத்தும் பவழமும்

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் — விலை அணு 8.

சுகுணவதி அல்லது மனம்போல மாங்கலியம் — விலை ரூபா 1.

எளிய நடையில் எழுதப்பட்ட இனிய தமிழ்ப் புத்தகங்கள். அழகிய பல ஆப்டோன் படங்கள். உயரிய பெதர்வெயிட் காகிதம். யாவரும் படித்து இன்பமடையவேண்டுமென்றே குறைந்தவிலை வைக்கப்பட்டுளது.

விலாசம்:—ஸ்ரீ கிருஷ்ண பப்ளிஷிங் ஹௌஸ், மயிலாப்பூர், மதராஸ்.

நம்பிக்கையான புஸ்தக வியாபாரிகள்

தமிழ், இங்கிலீஷ் தெலுங்கு, ஹிந்தி புஸ்தகங்கள் எல்லாம் எங்களிடம் கிடைக்கும். தேவையான புஸ்தகங்களுக் கெழுதவும்.

கே. எஸ். மணியம் அண்டு கோ., புஸ்தக வியாபாரிகள், இராயப்பேட்டை, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)